stered as a Newspaper in Ceylon ★ விலை சதம் 10

# ஈழநாடு

THE EELA NADU

தேசீய தினசரி National Tamil Daily

மலர் 7 (20-9-65) இதழ் 220

விசுவாவசு புரட்டாதி 4 ஜ: அவ் பிறை 23 திங்கட்கிழமை

கண்ணைக் கவரும்
தங்க, வைர நகைகளுக்கு
போன் 585 PHONE 585
K.N.M.
மீரன் சாஹிப்
தங்கப்பவுண நகை மாளிகை
கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்.

### மாவட்ட சபையிடம் கடற்றொழில் பொறுப்பு

"மாவட்டசபைகள் அமைக்கப்பட்டதும் கடற்றொழில் அபிவிருத்திப் பொறுப்பும் அதனிடம் ஒப்படைக்கப்படும். கடற்பிரதேசம் அதிகமாகவுள்ள தமிழ்ப் பகுதி இதனுல் பொருளாதாரத்தில் அபிவிருத்தியடைய நிறைய வாய்ப்புக்கிடைக்கும் கடற்றொழிலாளர் சமூகத்தைத் தவிர்ந்த ஏனேயோரும் இத்தொழிலில் ஈடுபடவேண்டும்'' என்று ஸ்தலஸ்தாபன மந்திரி திரு. எம். திருச்செல்வம் தாளையடி சனசமூகநிலைய மண்டபத்தில் நடைபெற்ற ஒரு கூட்டத்தில் கூறினர்.

# இந்தியாமீது சீன இன்று போர் தொடுக்குமா?

## பாதுகாப்புச் சபை மீண்டும் கூடுகிறது

நியுயோர்க், செப்.19

இந்தியா-பாகிஸ்தான் யுத்தநிலை சம்பந்தமாக ஆராய்ந்து தீர்மானம் நிறைவேற்றும் பொருட்டு ஐ. நா. பாதுகாப்புச்சபைஇன்றிரவு மீண்டும் கூடவிருக்கிறது. பாதுகாப்புச்சபைப் பிரதிநிதிகள் தத்தம் அரசாங்கங்களுடன் ஆலோசனை செய்த பின்னர் பாதுகாப்புச்சபை நிறைவேற்றவேண்டிய தீர்மானம் குறித்து உடன்பாடு கண்டபின்னர் பாதுகாப்புச் சபை இன்றிரவு மீண்டும் கூடுமென அதன் தலைவர் கோல்ட்பர்க் தெரிவித்தார்.

பாதுகாப்புச் சபையின் நேற்றய கூட்டத்தில் இந்தியாவும், பாகிஸ்தானும் யுத்தத்தை உடனடியாக நிறுத்தவேண்டுமென சோவியத் யூனியன், அமெரிக்கா, பிரிட்டன், பிரான்ஸ் ஆகிய நாடுகள் கேட்டுக் கொண்டன.

இந்திய-பாகிஸ்தான் யுத்தத்தை நிறுத்துவதற்கு பாதுகாப்புச்சபை தனது சட்ட அதிகாரத்தை உபயோகிக்க வேண்டுமென நெதர்லன்ட்ஸ் மட்டும் வலியுறுத்தியது.

காஷ்மீருக்குள் பாகிஸ்தான் ஊடுருவல் செய்ததைப் பாதுகாப்புச் சபை கண்டிக்க வேண்டுமென மலேஷியப்பிரதிநிதி கூறினர்.

இந்தியப் பிரதிநிதி திரு எம்.ஸி. சாக்ளா பேசுகையில் காஷ்மீரில் துப்பாக்கி முனையில் வாக்கெடுப்பு நடத்தவேண்டுமென்ற பாகிஸ்தானின் விருப்பத்துக்கு இணங்கினல் உலகசமாதானம் குலையும் என்ருர். காஷ்மீர் இந்தியாவின் பிரிக்க முடியாத ஒரு பிரதேசம் என்பதை அவர் வலியுறுத்தினர். சீனவில் கெடுபற்றி திரு. சக்ளா குறிப்பிடுகையில்; இது இந்திய—சீனத் தகராறில் ஒரு அம்சமெனப்பாதுகாப்புச்சபை கருதினல் அது பெருந் தவறு என்றும் இந்திய பாகிஸ்தான் சண்டை மேலும் விரிவடைகிறதென்பது தான் இதன் அர்த்தம் என்றும் அவர் கூறினர்.

## உலக நாடுகள் கவலை
## சிக்கிமில் சீனத் துருப்புக்கள்
### லாகூர் முனையில் யுத்தம் மந்தநிலை

லண்டன், செப். 19

சீன-சிக்கிம் எல்லையிலுள்ள சகல இந்திய ராணுவநிலைகளையும் மூன்று தினங்களுக்குள் இந்தியா விலக்கிக்கொள்ளவேண்டுமென இந்தியாவுக்குச் சீன விடுத்திருந்த காலக்கெடு நாளை திங்கட்கிழமை அதிகாலையுடன் முடிவடைகிறது. சீனவின் எச்சரிக்கைக் குறிப்பில் கொடுக்கப்பட்டிருந்தபடி காலக்கெடு முடிவடைந்ததும் சீன என்ன செய்யவிருக்கிறதென்பதைப் பற்றி உலக நாடுகள் கவலையுடன் எதிர்பார்த்துக்கொண்டிருக்கின்றன.

ஐ. நா. மகாசபைக்கூட்டத்தில் கலந்துகொள்ள நியுயோர்க் சென்றிருக்கும் 100 நாடுகளின் பிரதிநிதிகள் இந்திய-பாகிஸ்தான் யுத்தநிலைமை பற்றியும், சீனவின் எச்சரிக்கை பற்றியும், இந்திய உபகண்டத்தில் அமைதியை ஏற்படுத்துவதற்கான முயற்சிகள் பற்றியும் திரைமறைவில் ஆலோசனை நடத்திக்கொண்டிருந்தனர்.

அமெரிக்க ஜனதிபதி ஜோன்சன் இந்திய எல்லைகளில் உள்ள நிலைமைபற்றி தமது உயர்தர ஆலோசகர்களுடன் கலந்துரையாடியதாகவும் அறியப்படுகிறது.

### சிக்கிமில் சீனத்துருப்புகள்

சிக்கிமில் இந்தியாவின் கட்டுப்பாட்டுக்குள் உள்ள பிரதேசத்தில் 500 யார் வரை சீனத் துருப்புக்கள் நுழைந்திருப்பதாக இந்திய ராணுவ அதிகாரியொருவர் நேற்றிரவு தெரிவித்ததாக ஒரு செய்தி கூறுகிறது.

இன்றிரவு மீண்டும் கூடும் ஐ. நா. பாதுகாப்புச்சபை இந்திய — பாகிஸ்தான் யுத்தத்தை நிறுத்துவதற்காகச் செய்யும் தீர்மானத்தைப் பொறுந்தே நாளை சீனவின் நடவடிக்கை தங்கியிருக்கும் என்று அரசியல் அவதானிகள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

### போர்முனையில் மந்தநிலை

லாகூர் போர்முனையில் சில குண்டுகள் தீர்க்கப்பட்டதைத்தவிர பொதுவாக இருதரப்பிலும் மந்தநிலை காணப்பட்டதாக அங்கிருந்து கிடைத்த செய்திகள் கூறுகின்றன. இதரமுனைகளில் தொடர்ந்து சண்டை நடைபெறுவதாக செய்திகள் கூறுகின்றன.

இரு இந்திய யுத்தவிமானங்கள் இன்று அதிகாலையில் சுட்டு வீழ்த்தப்பட்டதாகவும் சியால்கோட் பகுதியில் ஜாம் நகரில் இந்திய தளம்மீது பாகிஸ்தான் விமானங்கள் குண்டுவீசியதாகவும் பாகிஸ்தான் வானெலி தெரிவித்தது.

## "சுதந்திரத்தைக் காப்பாற்ற இன, மத ஒற்றுமை அவசியம்"
### இந்துக்கல்லூரி வைர விழாவில் சேர் அல்பர்ட் பீரிஸ் பேச்சு

யாழ்ப்பாணம், திங்கள்

'இன, மத பாகுபாடின்றி இலங்கையிலுள்ள நாம் அனைவரும் சகோதரர்களாக வாழவேண்டும். நாம் சுதந்திரத்தை சகோதரர்களாக இருந்தே பெற்ருேம். அந்தச் சுதந்திரத்தையும் நாட்டு நலனையும் பாதுகாக்க நமக்குள் ஒற்றுமையும், நல்லெண்ணமும் அவசியம்.'

இவ்வாறு ஜனப்பிரதிநிதிகள் சபை சபாநாயகர் அல்பேர்ட் பீரிஸ் யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி வைர விழாவையொட்டி கல்லூரி பழைய மாணவர்கள் சங்கம் சென்ற சனிக்கிழமை நடத்திய இரவு விருந்தில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு பேசுகையில் குறிப்பிட்டார்.

''எமது நாடு சிறிய நாடு. இதில் நாம் பூசல்களை வளர்த்துக்கோள்வது நன்மை பயக்கமாட்டாது. மனித சமூகத்தல் பல்வேறு வேறுபாடுகள் இருக்கத்தான் செய்யும். ஆனுல் ஒரு பொது நோக்குக்காக நாம் ஒன்றுபடுவோம். நம் நாடு பொன்விளையும் பூமி. இதில் பொன்னைத் தேடிக்கொள்வது எமது கையில்தான் இருக்கிறது'' என்று சேர் அல்பேர்ட் கூறினர்.

'நாட்டின் முன்னேற்றத்திற்குத் தமிழ் சமூகத்தைச் சேர்ந்தவர்கள் பலர் பெரிதும் உழைத்திருக்கிருர்கள் என்பதை நான் குறிப்பிட விடும்புகிறேன்' எனத் தெரிவித்த சேர் அல்பேர்ட் பீரிஸ் காணி அமைச்சின் நிரந்தரக் காரியதரிசியாக இருக்கும் திரு. ஸ்ரீகாந்தாவுக்குப் பாராட்டுத் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து பேசுகையில் யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி அறிவுவளர்ச்சிக்கு மட்டுமின்றி தமிழ் மக்களின் பாரம்பரிய சிறப்பையும் கலாச்

(6-ம் பக்கம் பார்க்க)

### விலைகள் ஏற்றம்

பருத்தித்துறை, ஞாயிறு

பருத்தித்துறைக் கடைத் தெருவில் உப உணவுப் பொருட்களுக்குப்பெருந்தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. பொருட்களது விலை உயரலாம் என எண்ணிப் பதுக்கல் செய்யப்படுவதாயும் கூறப்படுகிறது.

துணிமணிகளின் விலையும் அதிகரித்துள்ளது. வேஷ்டிகட்கு ஏற்பட்டுள்ள தட்டுப்பாட்டால் யப்பான் பீஸ் வேட்டி ரூபா 17 வரை விற்பனையாவதாகக் கூறப்படுகிறது.

கட்டுப்பாட்டு விலைக்கு மேலாக விற்பனை செய்த வியாபாரிகட்கு சமீபத்தில் பெருந்தொகையான அபராதம் விதிககப்பட்டதைத் தொடர்ந்து அப்படியான பொருட்கள் இல்லையென்ற சொல்லை பல கடைகளில் கேட்க முடிகின்றது.

## 'ஈழநாடு' சூருவளிசபை இதுவரை ரூ. 16,962 வழங்கியுள்ளது

யாழ்ப்பாணம், திங்

'ஈழநாடு' சூருவளி கஷ்ட நிவாரண சபையினர் இதுவரை பொருளாகவும், பணமாகவும் சூருவளியால் பாதிக்கப்பட்டவர்களுக்கு வழங்கிய விபரம் வருமாறு:

நாகர்கோவில்-610 ரூபா, பருத்தித்துறை- 580 ரூபா, வல்வெட்டித்துறை-650 ரூபா, பலாலி-590 ரூபா, மயிலிட்டி-2740 ரூபா, நெடுந்தீவு-390 ரூபா, யாழ்ப்பாணம் தீவுப்பற்று-295 ரூபா, யாழ்ப்பாணம்-545 ரூபா, பச்சிலைப்பள்ளி-2100 ரூபா, திருக்கோணமலை தபோவனம்-1000 ரூபா, திருக்கேதீஸ்வரம்-1000 ரூபா, காந்தி சேவாசங்கம் -1000 ரூபா, மாதாந்த உதவி-350 ரூபா, தருமபுரம் (இலவச அரிசி) 1482 ரூபா 92 சதம், பொருள்கள் விநியோகம் 3899 ரூபா 30 சதம்.

### திரு. மார்ட்டினுக்கு செனட்டர் பதவி?

பம்பலப்பிட்டி, ஞாயிறு

செனட் சபைக்கு தேசிய அரசாங்கத்தி[illegible] நியமிக்கப்பட வேண்டி[illegible]களின் பெயர் பட்டி[illegible] பூர்த்தி செய்யப்பட்டுள்ளதாக தெரிய வருகிறது.

அரசாங்கம் மூன்றுஅங்கத்தவர்களையும், எதிர்க் கட்சியினர் இரு அங்கத்தவர்களையும் தான் தெரிவு செய்ய முடியும்.

திருவாளர்கள் எஸ். எம்.

(6-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மணிவாக்கு

பேராசை இராவிடில் ஆயுதங்களுக்கே அவசியமிராது. சுரண்டல் ஆசை நீங்கிவிடின் ஆயுதங்கள் தாங்க முடியாத பளுவென்பது உணரப்படும். ஒரு நாடு மற்றொன்றைச் சுரண்டுவதை நிறுத்தாவிடின் உண்மையான ஆயுதபரிகரணம் ஏற்பட முடியாது. —மகாத்மா


# ஈழநாடு

EELA NADU: National Tamil Daily Post Box 49, JAFFNA
Telegrams: EELA NADU Jaffna. Phone: 389

யாழ்ப்பாணம் விசுவாவசு ஆண்டு புரட்டாதிமீ 4 வ (20-9-65)


## உலக சமாதானத்துக்கு ஆபத்து

இந்தியாவுக்கு சீனு கொடுந்த மூன்று நாள் கெடு இன்றுடன் முடிவடைகிறது. இந்திய-சீன எல்லையில் சீனு மீண்டும் தாக்குதல் ஆரம்பிக்குமா? சீனுவும் தாக்கினுல் இந்தியாவின் நிலை என்ன? இந்திய — சீன — பாகிஸ்தான் ஆகிய நாடுகளுக்கிடையில் ஏற்படும் யுத்தம் மூன்று நாடுகளுக்கிடையிலேயே, நின்றுவிடுமா? வல்வரசுகளும் தலையிட்டு மூன்ருவது உலக யுத்தமாக மாறுமா?

உலகநாடுகள் மட்டுமல்ல அமைதியை விரும்பும் உலகமக்கள் அனைவரும் கவலையுடன் கேட்கும் கேள்வி இது. இன்றுள்ள நிலையில் உலகசமாதானம் சீனுவின் கையில் தானுள்ளது. சீனு என்ன செய்யப்போகிறது? இந்திய—சீன எல்லையில் இந்தியப் படைகளில் ஒரு பிரிவை வைத்துக்கொண்டிருக்கச் செய்யும் பொருட்டு சீனு மிரட்டல் அறிக்கைகளையும் ஆட்சேபக் குறிப்புக்களையும் அனுப்புவதன்மூலம் இந்திய — பாகிஸ்தான் யுத்தத்தில் பாகிஸ்தானுக்கு சீனு உதவி புரிய முடியுமென்றும் பிரிட்டிஷ் பத்திரிகையொன்று கருத்துத் தெரிவித்திருந்தது. ஆனுல் சீனு இந்தியாவுக்குமூன்றுநாள் கெடு கொடுத்திருப்பதும் இந்திய — சீன எல்லையில் வடாக் பகுதியிலும் சிக்கும் எல்லைப் பகுதியிலும் சீனு துருப்புக்களைக் குவிப்பதாகச் செய்திகள் கூறுகின்றன. வெறும் மிரட்டலுக்காகப் படைகளைக் கொண்டுவந்து குவிக்க வேண்டியதில்லை!

இந்தியாவும் பாகிஸ்தானும் உடனடியாக யுத்தத்தை நிறுத்திக்கொண்டு சமாதானப் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்கவும் அதற்கான முயற்சிகளை சோவியத், அமெரிக்க வல்லரசுகளின் உதவியுடன் ஐ. நா. பாதுகாப்புச் சபையும் ஐ. நா. தலைமைக் காரியதரிசியும்மேற்கொண்டிருக்கையில் இந்தியாவுக்கு சீனு மூன்று நாள் கெடு கொடுத்து எல்லையில் படைகளையும் குவிப்பதானுல் அதன் அர்த்தம் என்ன? இந்தியாவுக்கும் சீனுவுக்குமிடையில் மீண்டும் சண்டை ஏற்பட்டால் பாகிஸ்தான் சண்டையை நிறுத்திக் கொள்ளுமா? பாகிஸ்தான் யுத்த நிறுத்தத்துக்கு இணங்கவேண்டுமென காமன்வெல்த் நாடுகளும் மேற்கு நாடுகளும் நிச்சயம் பாகிஸ்தானை வற்புறுத்தும். பாகிஸ்தான் யுத்தத்தை நிறுத்தினுலும் நிறுத்தாவிட்டாலும் அமெரிக்காவும் பிரிட்டனும் சீன கம்யூனிஸ தாக்குதலிலிருந்து இந்தியாவைப்பாதுகாக்க இந்தியாவுக்கு உதவி அளிக்கவேண்டும். ஆயுதங்களை மட்டும் அமெரிக்கா அளிக்குமா? வேறு எந்தவகையில் அது உதவி அளிக்கும்? இவ்வித நிலை ஏற்பட்டால் சோவியத் யூனியன் என்ன செய்யும்?

இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்குமிடையில் யுத்தம் நடைபெற்றுக் கொண்டிருக்கும் இச்சமயத்தில் சீனு இந்தியாவுக்கு எச்சரிக்கை விட்டிருப்பதுடன் படை நடவடிக்கைகளுக்குஆயத்தம் செய்திருப்பதற்கு காரணம் என்ன?

சீனுவின் நோக்கம் எதுவானுலும் இந்திய உபகண்டத்தில்இன்றுதோன்றியுள்ள ஆபத்தான நிலை நிச்சயம் உலக சமாதானத்துக்கே ஆபத்தானதாகும். தென்கிழக்காசியாவில் மட்டுமல்ல உலகிலேயே சமாதனத்தைப் பாதுகாக்க வேண்டுமானுல் உலகநாடுகள் உடனடியாக சமாதான முயற்சியில் ஈடுபடவேண்டும். உலக அபிப்பிராயத்தைப் புறக்கணித்து விட்டு எந்தநாடும் தன்னிச்சைப்படி நடந்து கொள்ளத்துணியமாட்டாது. இந்திய சீனத்தகராறில் முன்னர் தலையிட்டு யுத்த நிறுத்தத்துக்கு உதவிய கொழும்பு நாடுகளுக்கும் இன்றைய நிலையில் பொறுப்பு அதிகம். இலங்கை உட்பட கொழும்பு நாடுகள் அனைத்தும் உடனடியாக, மீண்டும் சீன-இந்திய எல்லையில் மோதல் ஏற்படாமல் தடுக்கமுன் வர வேண்டியது அவசியம். இன்றுள்ள நிலையில் சீன-இந்திய எல்லையில்மோதல் ஏற்பட்டால் அது எல்லைச் சண்டையாக மட்டும் நின்றுவிடாதென்பது உண்மை.

# சீன பூச்சாண்டியால் நிலைமையில் புதிய திருப்பம்

## இரண்டொரு நாட்களில் சண்டை நின்றுவிடலாம்?

### பாகிஸ்தானுக்கு உண்மை நண்பர் யார்? சீனமா? அமெரிக்காவா?

நமது அரசியல் நிருபர்

இந்தியாவுக்குச் சீனம் விடுத்துள்ள திடீர் எச்சரிக்கை, பலரையும் கலங்கச் செய்துள்ளது. பாகிஸ்தானும் இந்தியாவும் சண்டை செய்கையில், இந்தியாவை மற்றொரு அரங்கான சிக்கிம்மில் சீனம் தாக்குமாயின், இந்தியா அதை எதிர்த்து நிற்க முடியுமா? அதிக இராணுவ பலம் வாய்ந்த சீனத்தின் எதிர்ப்பைச் சமாளிக்க முடியாமல் முன்னர் இந்தியா சங்கடப்பட்டது. இப்போது மீண்டும் சீனம் தாக்குமாயின் இந்தியா முறியடிக்கப் பட்டுவிடலாமென்றும் பலரும் அஞ்சுவது இயற்கை.

ஆனுல் பாரதப் பிரதமர் லால்பகதூர், பீகிங்கின் இறுதி எச்சரிக்கையைக் கண்டு அஞ்சவில்லை. அந்த எல்லையில் தாங்கள் எவ்வித தகாத காரியமும் செய்யவில்லையென்றும் வேண்டுமானுல் நடுநிலைமை நாடுகளைக் கொண்டு இதைக் கவனிக்கச் செய்யலாமென்றும் இந்தியா கூறிவிட்டு, பாகிஸ்தானுக்கு உதவி செய்யவே, இப்போதுசீனம் இந்தியாமீது பொய்க் குற்றங்களைச் சாட்டுவதாகவும், சீனம் தாக்குமாயின் அதை எதிர்த்து நிற்க இந்தியா தயார் என்றும், சீனப் போர் முனையிலும் இந்திய இராணுவம் போரிடத்தயாரென்றும், பிரதமர் லால் பகதூர் பலத்த கரகோஷத்திடையே இந்திய லோகசபையில் சீனத்துக்குச் சரியான பதிலளித்தார். அவரது இந்தப்பதில் அவரது மதிப்பை மட்டுமன்றி இந்தியாவின் மதிப்பையும் பொதுவாக உயர்த்துவதாகவுள்ளது.

என்ன தைரியத்தைக் கொண்டு இந்தியா இவ்வளவு துணிச்சலுடன் உள்ளது? உலகிலேயே அதிக ஆள்பலம் கொண்டது சீனம். அணுகுண்டும் தயாரித்துவிட்டது அதனுடன் ஒப்பிடுகையில் இந்தியாவின் நிலைமை பலவிதங்களிலும் பலவீனமானது. மேலும் பல நண்பர்களைக் கொண்ட பாகிஸ்தானுடன் இந்தியா பலமான போராட்டத்தில் ஈடுபட்டுள்ளது. அவ்வளவு சோதனைகளுக்கும் உட்பட்ட இந்தியா, சீனத்துக்குச் சற்றும் பயப்படாமல் இவ்வித பதிலை அளித்துள்ளதாயின் அதற்குக் காரணம் தன் கட்சியிலுள்ள நியாயம் ஒருபுறமிருக்க, இந்தப் பயமுறுத்தலால் சீனத்தின் வேஷம் கலைந்து, பல நாடுகளிலும் அதன் உண்மை ஸ்வரூபத்தை அறியவும், இதனுல் பல ஆசிய-ஆபிரிக்க நாடுகள் மட்டுமன்றி, ரஷ்யா, அமெரிக்கா முதலிய நாடுகளின் ஆதரவும் தனக்குக் கிடைக்க முடியுமென்ற புதிய நம்பிக்கையாக இருக்கலாம்.

நடப்பதெல்லாம் நன்மைக்கே என்று கூறுவதுண்டு. அதேபோல, சீனத்தின் இந்தப் பூச்சாண்டியும் இந்தியாவுக்கு மறைமுகமாக நல்லதுதான். பீகிங் எச்சரிக்கையை மாஸ்கோவிடம் இந்தியா எடுத்துக் கூறியதும், இந்தியாவுக்கு வேண்டிய ஆயுதங்களைக் கொடுக்க ரஷ்யா சம்மதித்துள்ளதாம். சீனத்துக்கும் ரஷ்யாவுக்கும் உறவுகள் திருப்திகரமாக இல்லை. ஆகவே சீன ஆபத்திலிருந்து தன்னைக் காத்துக்கொள்ள இந்தியாவுக்கு ரஷ்யாவின் உதவிகள் தாராளமாகக் கிடைக்குமாயின் அது இந்தியாவின் கட்சியை வலுப்படுத்தும்.

இதைவிட, ஆசிய-ஆபிரிக்க ஒற்றுமையைப்பற்றிப் பல்லவி பாடி, ஆசிய-ஆபிரிக்க மகாநாட்டை அல்ஜீரியாவில் நவம்பர் மாதத்தில் கூட்ட பகீரத முயற்சிகளைச் செய்கின்றது சீனம். இந்தியா ஓர் ஆசிய நாடு. ஆசிய-ஆபிரிக்க மக்களின் ஒற்றுமையையும் சுபீட்சத்தையும் சீனம் உண்மையில் கருதுவதாயின், இந்திய-பாகிஸ்தான் சச்சரவைச் சமாதானமாகத் தீர்த்து வைக்கவே அது எல்லா முயற்சிகளையும் செய்ய வேண்டும். காஷ்மீர் சச்சரவிலே தாங்கள் தலையிடப் போவதில்லை என்று பீகிங் ஏற்கெனவே 1962-ம் வருடத்தில் இந்தியாவுக்கு ஓர் உறுதிமொழி கூறியிருந்தும், இப்போது பாகிஸ்தான் பக்கம் அது சேர்ந்து, இந்தியா மீது வசைமாரி பொழிவதுடன், இந்தியாவுக்கு இரண்டாவது முனை ஏற்படுத்தி அதைத் திகைக்க வைக்கவும் முற்பட்டுள்ளது? எரிகிற கொள்ளியில்எண்ணெய் வார்க்கும் சீனத்தின் நல்லெண்ணத்தில்மற்ற ஆசிய ஆபிரிக்க மக்களுக்கு எப்படி நம்பிக்கை ஏற்பட முடியும்?

இந்தியாவுடனும், அதன் முன்னுள் பிரதமர் நேருவுடனும் சீனம் அதிக நட்புடனிருந்து வந்தது. 'இந்தி-சினி பாய் பாய்' என்ற கோஷங்களும் எழுந்தன. [illegible] இருந்தும் இப் [illegible] எவ்வித நியாயமான காரணமுமின்றி, இந்தியாமீது பாய்வது, இப்போது சீனத்துடன் நட்புடனிருக்கும் பாகிஸ்தான் உள்ளிட்டு எல்லா ஆசிய-ஆபிரிக்க நாடுகளுக்கும் பெரிய எச்சரிக்கையாக இருக்க வேண்ரும். ஆசிய நாடான இந்தியாமீது பாயும் சீனம், ஏன் இனி மற்ற ஆசிய-ஆபிரிக்க நாடுகள் மீதும் பாயாது? இந்தியாவுக்கு சீனம் அனுப்பியுள்ள எச்சரிக்கை, ஓநாய் ஆட்டுக்குட்டி கதையையே நினைப்பூட்டுவதாகவுள்ளது.

∴ ∴ ∴

சீனத்தின் ஆதரவை நம்பி ஐ. நா. ஸ்தாபனத்தையும், அமெரிக்க நட்பையும் பாகிஸ்தான் உதறித்தள்ளுமா? முஸ்லீம் நாடான பாகிஸ்தானுக்கு நாஸ்திக நாடான சீனத்தின்மீது உண்மையில் பூரண நம்பிக்கை இருக்க முடியாது.

காஷ்மீரைப்பெறவேண்டுமென்ற ஒரே நோக்கத்துடன் தான் அது சீனத்துடன் புதிய நட்பு கொண்டாடுகின்றது. தன் விரோதியின் விரோதி தனக்கு நண்பனுகலாமென்ற தவருன மனப்பான்மைதான் சீன—பாகிஸ்தான் புது உறவுகளுக்கு அடிப்படை காரணம்.

என்ருலும் சீனத்தின் முதல் நம்பர் எதிரியான அமெரிக்காவுடன் பாகிஸ்தான் இன்னும் நட்புக் கொண்டுள்ளது. அமெரிக்கா மனம் வைத்தால் இந்தியா—பாகிஸ்தான் பிரச்னையை வெற்றியுடன் தீர்க்க முடியுமென்று அதிபர் அயூப் பத்திரியை நிருபர்களிடம் தெரிவித்துள்ளார். ஆனுல் சீனத்துடன் புது நட்புக்கொண்டுள்ள பாகிஸ்தான்மீது அமெரிக்காவின் பழைய நம்பிக்கை பெரிதும் குலைந்திருக்க வேண்டும். பாகிஸ்தானின் யோசனையை அமெரிக்கா ஏற்கவில்லை. ஐ. நா. ஸ்தாபனத்தின் மூலமே காஷ்மீர் பிரச்னையைத் தீர்க்க வேண்டுமென்று அமெரிக்கா கூறிவிட்டது. 'காமன்வெல்த்தும்' இதே பதிலைத் தெரிவித்துள்ளது.

இந்நிலையில் பாகிஸ்தான் என்ன செய்யப்போகிறது? சீனத்தின் உதவியை நம்பிக்கொண்டு, ஐ. நா. ஸ்தாபனத்தை இனியும் மீறி, அதிலிருந்து வெளியேறி விடுமா அல்லது ஐ நா. வின் யோசனைக்கு எவ்வித நிபந்தனையுமின்றி பணிந்து, சண்டையை நிறுத்தி சமாதான வழிகளைப் பின்பற்றுமா?

∴ ∴ ∴

சென்ற இரண்டு வாரச் சண்டையிலே பாகிஸ்தான் சில புதிய விஷயங்களைத் தெரிந்து கொண்டிருக்க வேண்டும். நேருவுக்குப்பின் இந்தியா பலவீனமடைந்துவிடவில்லை. இதற்கு மாருக புதிய ஒற்றுமையுடனும், பலத்துடனும் அது பொலிகின்றது. உருவத்தில் சாஸ்திரி சிறிதாக இருக்கலாம். ஆனுல் நெஞ்சுறுதியிலும், வீரத்திலும் அவர் யாருக்கும் பின்வாங்கியவரல்லவென்பதைக் காட்டிவிட்டார்.

அது மட்டுமன்றி இப்போது சண்டை பாகிஸ்தான் மண்ணில்தான் நடக்கின்றது. பல எதிர்ப்புகளையும் சமாளித்து, இந்திய இராணுவம் முன்னேறியுள்ளது. இந்தச் சண்டையால் இந்தியாவுக்கோ பாகிஸ்தானுக்கோ நன்மையில்லை என்பதை அதிபர் அயூப்கான்உணர்ந்துள்ளதாலும் ஒவ்வொருநாள் சண்டையும் பெரும் சேதங்களை விளைவிப்பதாலும், ஐ. நா. வின் யோசனையைக் கேட்டு, அவர் நிபந்தனையின்றி இந்தியாவைப்போல் சண்டை நிறுத்தத்துக்கு உடன்படுவாரென்றும், இரண்டொரு நாட்களில் இந்தச் சண்டை நின்றுவிடுமென்றே நம்ப அதிக இட

(6-ம் பக்கம் பார்க்க)

# "தமிழரின் சிறப்பினை உணர்த்தும் நூல்கள் தேவை"

மாவிட்புரம், ஞாயிறு

'ஈழத்தமிழரின் சரித்திரம் மிகவும் தொன்மையானது. தமிழர் இந்த நாட்டில் சிறப்புடன் வாழ்ந்ததனை உணர்த்தும் சின்னங்கள், சான்றுகள் நம்மத்தியில் ஏராளமாக உண்டு. இவற்றினை ஆராய்ந்து தமிழ்மக்களுக்கு அவர்களின் சிறப்பினை உணர்த்தும் நூல்கள் எழுதப்படவேண்டும்' என்று திரு. சண்முகசுந்தரம் மாவிட்டபுரத்தில் நடைபெற்ற நூல் வெளியீட்டு விழாவில் பேசும்போது குறிப்பிட்டார்.

மாவிட்டபுரம் கணேசையர் தமிழ்ச்சங்கத்தின் மூன்ருவது வெளியீடான 'இறுதி மூச்சு' என்னும் வரலாற்று நாடகநூல் வெளியீட்டு விழா சங்கத்தலைவர் புலவர் ம. பார்வதிநாதசிவம் தலைமையில் நடைபெற்றது.

சங்கச் செயலாளர் திரு. இரா. சுந்தரராஜசர்மா அனைவரையும் வரவேற்றுப் பேசினுர்.

புலவர் ம. பார்வதிநாதசிவம் பேசுகையில், 'சிறுகதை, நாவல் துறைகளில் ஈடுபட்டு ஆரம்பத்தில்புகழ் பெற்ற நூலாசிரியரான திரு. த. சண்முகசுந்தரம், ஈழத்தின் நாடகவளர்ச்சிக்கு உதவ எண்ணம் கொண்டு பல நூல்களை உருவாக்கியுள்ளது பாராட்டப்படவேண்டியதொன்று எனக் குறிப்பிட்டார்.

சங்கநூற்செல்வர்பண்டிதமணி எஸ். அருளம்பலவனுர் பேசியதாவது:—

''திரு. த. சண்முகசுந்தரம் எழுதிய ''இறுதிமூச்சு' வரலாற்று நாடகமாகும். கற்பனைநயமும் அழகான சொற்ருெடர்களும் நிரம்பியது. இவ்வாருன நாடக நூல்கள் தமிழில் ஏராளமாக வெளிவரவேண்டும். ஈழம் வாழ் அறிஞர்கள் இப்பெரும்பணியில் ஈடுபடுவது அவசியமாகும். தமிழர் வீரம், பண்பு, அன்பு என்பனவற்றைப் பிரதிபலிக்கும் வகையில் நூல்கள் எழுதப்படுவதனை அனைவரும் வரவேற்பர்.''

சிவஸ்ரீ சு. துரைசாமிக் குருக்கள் ஆசியுரை வழங்கும்போது கணேசையர் தமிழ்ச்சங்கம் தமிழுக்குச் செய்துவரும் தொண்டு அனைவராலும் பாராட்டப்படவேண்டியதொன்று எனக் குறிப்பிட்டார்.

நூலாசிரியர் திரு. த.சண்முகசுந்தரம் தமது நூல்களை வெளியிட்டு தமிழுக்குத் தொண்டுசெய்யும் கணேசையர் தமிழ்ச் சங்கத்தைப் பாராட்டிப் பேசினுர்.

திரு. சி. நவரத்தினம்விற்பனையை ஆரம்பித்து வைத்தார். திரு. வி. ஆறுமுகம் முதற்பிரதியை வாங்கினுர். சங்கீதபூஷணம் ச. பாலசிங்கம், செல்வி ஞானம்பிகை [illegible] இன்னிசை நிகழ்ச்சியும் இடம் பெற்றது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இந்திய யுத்தநிலைபற்றி பிரிட்டன்-அமெரிக்கா தீவிர ஆலோசனை

## பிரிட்டிஷ் மந்திரியும் அதிகாரியும் வாஷிங்டன் செல்கின்றனர்

லண்டன், செப். 19

இந்திய—பாகிஸ்தான் யுத்த நிலைமை பற்றியும், இந்தியாவுக்கு சீன விடுத்துள்ள கெடுபற்றித் தோன்றியுள்ள நிலைமை பற்றியும் அமெரிக்க அரசாங்க உயர் அதிகாரிகளுடன் ஆலோசனை செய்யும் பொருட்டு பிரிட்டிஷ் மந்திரி ஒருவரும் உயர் அதிகாரி ஒருவரும் வாஷிங்டனுக்குச் சென்றுகொண்டிருக்கின்றனர். அமெரிக்க அரசாங்கத்துடன் இவர்கள் நடத்தவிருக்கும் முக்கியமான ஆலோசனைகளில், சீன மிரட்டல் காரணமாக இந்தியாவுக்கு நிறுத்தி வைக்கப்பட்டுள்ள ஆயுத உதவியை மீண்டும் அளிப்பது பற்றி அமெரிக்காவும் பிரிட்டனும் முடிவு செய்வது ஒன்ருகும் எனத் தெரிகிறது.

### மீண்டும் உதவி கிடைக்கும்

இந்தியாவுக்கு சீன விடுத்துள்ள எச்சரிக்கை காரணமாகவும் சீனவின் நடவடிக்கை காரணமாகவும் இந்தியாவுக்கு மீண்டும் அமெரிக்க ஆயுத உதவி கிடைக்குமெனத் தாம் எதிர்பார்ப்பதாக அமெரிக்க வெளிநாட்டு உதவிப்பகுதி உதவி டைரக்டர் கருத்து வெளியிட்டுள்ளார்.

இந்தியாவுக்கு சீன விடுத்துள்ள மூன்று நாள் கெடு சம்பந்தமாகத் தோன்றியுள்ள நிலைபற்றி மாஸ்கோவிலுள்ள இந்திய ஹைகமிஷனர் திரு. டி. என் கௌல் சோவியத் வெளிவிவகார மந்திரி திரு. குரோமிக்கோவைச் சந்தித்து பேசினர். இந்திய சீன எல்லைப் பாதுகாப்பு நிலை பற்றியும் இந்திய பாகிஸ்தான் யுத்த நிலைமை பற்றியும் இருவரும் பேசியதாகவும் அறியப்படுகிறது.

பாரிசிலுள்ள இந்திய ஹைகமிஷனர் பிரஞ்சு அரசாங்க உயர்தர அதிகாரிகளைச் சந்தித்து சீனவின் எச்சரிக்கை பற்றியும் அதனல் தோன்றக்கூடிய நிலை பற்றியும் கூறியதாகவும் இந்திய சீன நிலைபற்றியும் இந்திய பாகிஸ்தான் யுத்தநிலை பற்றியும் இந்திய ஹைகமிஷனர் விளக்கிக் கூறியதாகவும் அறியப்படுகிறது.

### படைகள் குவிக்கப்படுகின்றன

சிக்கிம் எல்லையில் உள்ள இந்திய ராணுவ நிலைகளை மூன்று தினங்களுக்குள் இந்தியா அகற்றிவிடவேண்டுமென சீன விடுத்த கெடு முடிவடைவதற்குச் சில மணி நேரங்களே இருக்கையில் இந்திய—சீன எல்லையில் சீன தனது படைகளைக் கொண்டுவந்து குவிப்பதாகவும் எல்லையிலுள்ள தனது நிலைகளை சீன வலுப்படுத்தி வருவதாகவும் செய்திகள் கூறுகின்றன. இந்திய—சீன எல்லையில் சிக்கிம் பகுதியில் இந்தியத் துருப்புக்கள் போர்நிறுத்த எல்லையைத் தாண்டவில்லையென்றும் இராணுவ நிலைகளை அமைக்கவில்லையென்றும் இதுபற்றிப் பாரபட்சமற்ற நடுநிலைமைக் கோஷ்டியொன்று நேரில் பரிசீலனை செய்யலாமென்றும் சீனவுக்கு இந்தியா தெரிவித்திருந்த யோசனைக்கு சீனவிடமிருந்து இதுவரை பதில் கிடைக்கவில்லை.

## "தமிழர் சிங்களமும் சிங்களவர் தமிழும் கற்ருல் நன்மையே"

யாழ்ப்பாணம், ஞாயிறு

இந்நாட்டிலுள்ள சிங்கள மாணவர்கள் தமிழ்மொழியையும், தமிழ்மாணவர்கள் சிங்கள மொழியையும் பயின்ருல், உதவியாகவிருக்கும் என்று இலங்கை அமெரிக்க கலாச்சார நிலையத்தில் நேற்றிரவு நடைபெற்ற சாகித்திய விழா கருத்தரங்கில் திரு. சிறி சார்ள்ஸ் டி சில்வா, இலங்கையில் சிங்கள இலக்கியம் என்னும் பொருள்பற்றி பேசும்போது கூறினர்.

திரு. கே. நேசையா தலைமையில் நடைபெற்ற இக் கருத்தரங்கில் திரு. சில்வா மேலும் கூறியதாவது:

பழைய காலத்தில் சிங்கள இலங்கியங்கள் அபிவிருத்தியடைய பல தடைகள் இருந்தன. பிரதிகள் பெற வேண்டுமானல், கையெழுத்துப் பிரதிகள் எடுக்கவேண்டிய நிலையிருந்தது. பிராமண பௌத்த பிக்கு ஒருவர் இங்கு வந்து சிங்கள இலக்கியங்களை பாளியில் மொழிபெயர்த்தார். பாளி அபிவிருத்தியடையாத மொழியாகவிருந்தும், இலங்கியங்கள்நிரந்தரமாக இருக்கவேண்டுமென்பதற்காக மொழிபெயர்த்தார். அதன் பின் காளிதாசனின் மேகதூதம் போல், சந்தேச காவியம் வெளிவந்தது. இக்காவியங்கள் நாற்பதுக்கு மேலுள்ளது. ஜாதர் கதைகளும் முக்கிய இடம்பெற்றிருந்தன. இப்படியாக சிங்கள இலக்கியங்கள் வளர்ச்சியடைந்தன.

யாழ்ப்பாணத்திலுள்ள மக்களை சந்திக்க சந்தர்ப்பம்கிடைத்ததையிட்டுமகிழ்ச்சியடைவதாகவும் அவர் தெரிவித்தார்.

திருவாளர்கள் திரு. ஆர். கந்தயா, எஸ் பென்னுத்துரை, எஸ். சிறிநிவாசன் ஆகியோரும் பேசினர்கள்.

இலங்கை எழுத்தாளர்களின் நூல்களும், அமெரிக்க இலக்கியங்களும் காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தன.

## 'தேசிய ஒற்றுமைக்கு ரஷ்யாவை பின்பற்றுக'

### பாரதி விழாவில் உடுவில் எம். பி.

குரும்பசிட்டி, ஞாயிறு

''தமிழ் இலக்கியத்தில் 'புரட்சி' என்ற சொல்லை முதலில் புகுத்தி, சோவியத் நாட்டின் ஸார் ஆட்சியின் கொடுமைகளைக் கண்டித்தும் மக்களின் வீரமிக்க போராட்டத்தின் வெற்றியைப் புகழ்ந்தும் பாரதி கவிதைகளை ஆக்கினர். அபிவிருத்தி குன்றிய நாடுகளுக்குப் பல்வேறு துறைகளிலும் சுயநலநோக்கின்றி சோவியத்நாடு உதவியளிக்கின்றது. அரசியல், பொருளாதார அமைப்புகளில் சோவியத்நாட்டிலிருந்து ஏகாதிபத்திய நாடுகள்கூட பின்பற்றக்கூடிய திட்டங்கள் பலவும் இருக்கின்றன. எமது அரசாங்கம் முழுக்க சோவியத்நாட்டுஅமைப்பை ஏற்றுக்கொள்ளா விடினும் குறிப்பிடத்தக்க அம்சங்களைத் தமது அரசியலில் சேர்த்துக்கொள்வது நல்லது.'' இவ்வாறு உடுவில் எம். பி. திரு. வி. தர்மலிங்கம் சுன்னுகம் புகையிரத நிலையத்துக்கு அருகாமையில் நடைபெற்ற பாரதி விழாவுக்குத் தலைமைவகித்துப் பேசும்போது கூறினர். நாவலர் மன்ற ஆதரவின் கீழ் இவ்விழா நடைபெற்றது. சோவியத் தூதுவர் திரு. எல் ஏ. கொறிபின் இவ்விழாவில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டார்.

திரு. தர்மலிங்கம் எம். பி., தமது பேச்சில் மேலும் கூறியதாவது: இலங்கை போன்று சோவியத்திலும் பல்வேறு இன மக்கள் வாழ்கின்றனர். நமது நாட்டில சிறுபான்மை இனத்தவர் ஒதுக்கப்பட்டு இரண்டாந்தரப் பிரஜைகளாக வைக்கப்பட்டுள்ளனர். சோவியத்தில் அரசியல் பொருளாதாரத் திட்டங்கள் சிறந்தனவாக இருந்தபோதிலும் மக்களின் ஒற்றுமை காரணமாகத் தமது தேசத்தின் வளர்ச்சியைக் காணமுடிந்தது. நமது நாட்டில் தேசிய ஒற்றுமை ஏற்பட, ஒரு மொழி, ஒரு சமயமென்ற அடிப்படையில்தான் முடியுமெனச் சிலர் கூறிவருகின்றனர். இக்குழுவினர் சோவியத்தைத் திரும்பிப் பார்த்து உண்மைநிலையை உணர்வது சிறந்ததாகும். ரஷ்ய நாட்டில் 25 கோடி பலதரப்பட்டமொழிபேசும் மக்கள் வாழ்கின்றனர். கசாக் பிரதேசத்தில் ஒரு கோடி மக்கள் வாழ்ந்த போதிலும் மொழி, சமய, அடிப்படை உரிமைகள் வழங்கப்பட்டுள்ளன. எழுத்து வடிவமில்லாத கசாக் மொழியைப் புரட்சிக்குப் பிந்திய அரசாங்கம் எழுத்து உருவம்கொடுத்து இலக்கியத் தரமான பாஷையாக்கியது.

வி. பொன்னம்பலம் பேசுகையில்'' இந்தியாவில் அந்நிய ஏகாதிபத்தியத்துக்கு எதிரான சுதந்திரஆட்சியை அமைக்கப் பாரதிபாடல்கள் பெரும் துணை புரிந்தன. பொருளாதார சமத்துவம், சாதிவேறுபாடுகள் இன்றி மக்களிடையே ஒற்றுமை ஆகியன குறித்தும் எல்லாவற்றிலும் மேலாக தமிழ் மொழி வளர்ச்சி பற்றியும் பாரதி கவிதைகள் சமைத்தார்'' என்று கூறினர்.

திருவாளர்கள் பொ. நாகலிங்கம், ஆ. தம்பிப்பிள்ளை, செல்வி ராதா சோமசுந்தரம் ஆகியோரும் இவ்விழாவில் சொற்பொழிவாற்றினர். சங்கீத பூசணம் நல். கந்தையாவின் இன்னிசை விருந்தும், கலைநிகழ்ச்சிகளும் இடம் பெற்றன.

### கையால் தயாரித்த தாள்

பேர்லின், செப்.19

ஜெர்மன் ஜனநாயகக்குடியரசில் கையால் தயாரிக்கும் கடுதாசியை உற்பத்தி செய்யும் 'வூல்ப்சுவின்கல்' என்னும் நிறுவனம் ஜனதிபதி நாஸருக்குக் கையால் செய்யப்பட்டதாளும், கையால் செய்யப்பட்ட கடித உறைகளும் அனுப்பி வைத்திருந்தது. ஜனதிபதியிடமிருந்து கிடைத்த ஒரு கடிதத்தில் கையால் தயாரிக்கப்பட்ட இந்தக் கடுதாசிகளின் தரத்தைப் பாராட்டியுள்ளார்.

### 'பேர்லின் சுவர்' எழுப்பியதேன்?

பேர்லின், செப். 19

'மேற்கு ஜெர்மனியின் உளவு வேலைகளையும், ஜெர்மன் ஜனநாயகக் குடியரசின் அபிவிருத்தியைக் குற்றுயிராக்குவதற்காக நிபுணர்களை ஆசைவார்த்தை காட்டிக் கடத்திச் செல்வதையும் தடுப்பதற்காக பேர்லினில் 1961 ஆகஸ்டில் பாதுகாப்பு மதில் எழுப்பப்பட்டது' என்று 'அல் குவாட் அல் மொஸல்லாஹ்' என்ற ஐக்கிய அரபுக் குடியரசின் இராணுவப்பத்திரிகை எழுதியுள்ளது. கிழக்கு ஜெர்மனி உட்பட கிழக்கு ஐரோப்பிய நாடுகள்மீது படையெடுக்க மேற்கு ஜெர்மனியில் திட்டம் தீட்டப்பட்டது என்று இப்பத்திரிகை எழுதியுள்ளது.

### கடுமையான ஆகாயப் பாதுகாப்பு

பேர்லின், செப். 19

புதியரக நவீன தொழில்நுட்ப முறைகளைக் கைக்கொண்டும், விமானப்படைக்கு உயர்ந்தரக பயிற்சி அளித்தும் ஜெர்மன் ஜனநாயகக் குடியரசின் ஆகாயம் மிகத் திறமையாகப் பாதுகாக்கப்பட்டு வருகிறது என்று ஜெர்மன் ஜனநாயகக்குடியரசு விமானப் படைத் தளபதி ஹெயின்ஸ் கெஸ்லர் ஒரு பேட்டியில் கூறினர்.

### 264,000 பிள்ளைகள் கல்வி ஆரம்பம்

பேர்லின், செப்.19

ஜெர்மன் ஜனநாயகக் குடியரசில் செப்டம்பர் முதல் வாரத்தில் 264,000 பிள்ளைகள் புதிதாகப் பாடசாலைகளிற் சேர்க்கப்பட்டனர். இத்துடன் மொத்தம் 2,494,000 பிள்ளைகள் இந்த நாட்டில் கல்விபயிலுகின்றனர். இங்குபுதியபாடசாலை இவ் வருடம் செப்டம்பர் முதற் திகதிதான் தொடங்கியது.

### பாராட்டு விழா

சுழிபுரம், ஞாயிறு

வண்ணார்பண்ணை ஐக்கிய லாபநிதிச் சிருப்பர் திரு. சு. கனகசபைக்கு அவரது சொந்தக் கிராமமக்கள் ஒரு பாராட்டு விழாவைநேற்று நடத்தினர். முள்ளானை கனகசபை வித்தியாசாலை மண்டபத்தில் நடைபெற்ற இவ்விழாவில் பல பெரியார்கள் பாராட்டுரை வழங்கினர். கலைநிகழ்ச்சிகளும் இடம்பெற்றன.

### இன்று வானெலியில் பேச்சு

சுழிபுரம், திங்கள்

சமூகக் குறைபாடுகள் ஒழிப்பு வாரத்தை முன்னிட்டு இன்று இரவு 9-15 மணிக்கு உடுப்பிட்டித் தொகுதி பாராளுமன்ற உறுப்பினர் திரு எம். சிவசிதம்பரம் இலங்கைவானொலி தேசிய ஒலிபரப்பில் உரையாற்றுவார்.

### கூட்டுறவு மகாநாட்டை மந்திரி திறந்துவைப்பார்

சுழிபுரம், சனி

வடபகுதி ஐக்கிய மேற்பார்வைச் சபை வருடாந்த கூட்டுறவு மகாநாடு இம்மாதம் 25-ந் திகதி சனிக்கிழமை காலை யாழ். மாநகர மண்டபத்தில் நடைபெறவிருக்கின்றது. மகாநாட்டை அமைச்சர் பிலிப் குணவர்த்தன ஆரம்பித்துவைப்பார் காலை நிகழ்ச்சிகள் சபைத் தலைவர் திரு. இ. இராசரத்தினம் தலைமையிலும் பிற்பகல் யாழ். மாநகர சபை முதல்வர் எஸ். சி. மகாதேவா தலைமையிலும் நடைபெறும். மற்றும் எச். எஸ். வனசிங்கா, சி. ஏ. என். ஜே. எம். சபாரத்தினம் ஆகியோர் கலந்து கொள்கிருர்கள்.

### பாரதி விழா

சுழிபுரம், ஞாயிறு

யாழ். மறுமலர்ச்சி மன்றத்தினர் உடுவில் முருகமூர்த்தி கோவில் முன்றலில் பாரதிவிழாவை கடந்த வாரம் வெகுவிமரிசையாகக் கொண்டாடினர். மன்றத் தலைவர் திரு. எஸ். செல்வரத்தினம் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் பலர் கருத்துரை வழங்கினர். நாடகம், நடனம் ஆகியன இடம்பெற்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'ஆசிரியர் இடமாற்றம் கல்வி வளர்ச்சிக்கு குந்தகமானது'

கோப்பாய், ஞாயிறு

''சுவீகரிக்கப்பட்ட பாடசாலை ஆசிரியர்கள் எவ்வளவோ கஷ்டங்களுக்கு மத்தியில் முகாமையாளர் பாடசாலைகளில் நியமனம் பெற்றவர்கள். நியமனம் பெற்றவர்களில் சிலர் சராசரி வீழ்ச்சி காரணமாக தமது சம்பளத்தையே இழந்து சேவையாற்றினர். தமது நேரம் முழுவதையும் தாம் கற்பிக்கும் பாடசாலைக்கே செலவிட்டனர் நன்கொடைகளை உதவி நல்ல பல மண்டபங்களை அமைத்தும் வேறு பல தொண்டுகளைச் செய்தும் ஊக்குவித்தனர். கடன் நிதி பெறுதல், லீவு முதலிய பல விஷயங்களில் அரசினர் ஆசிரியர்களுக்கும், சுவீகரிக்கப்பட்ட பாடசாலை ஆசிரியர்களுக்கும் பெரும்பேதம் காட்டி வரும் அரசாங்கம் அரசினர் ஆசிரியர்க்கு அதிகமான சலுகைகளைக் கொடுத்துவிட்டு இருபகுதியாரையும் கலந்து மாற்றுவது நியாயமானதல்ல. இந்தக் கொள்கையை வட இலங்கைத் தமிழ் ஆசிரியர் சங்கம் மிகவும் வன்மையாக எதிர்க்கின்றது. கண்டிக்கின்றது. மேற்கண்டவாறு சென்ற புதன்கிழமை அச்சுவேலி ஸ்ரேசன் பாடசாலையில் நிகழ்ந்த மேற்படி நிர்வாக சபைக் கூட்டத்துக்கு தலைமைதாங்கிப் பேசிய சங்கத் தலைவர் திரு. க. இ. குமாரசாமி கூறினார்.

'தேசிய கல்விக் கமிஷன் அறிக்கையில் மாவட்டசபை பற்றியும் ஒவ்வொரு ஆசிரியரும் தங்கள் தங்கள் சொந்த மாவட்டங்களிலேயே கடமையாற்ற வேண்டுமென்றும் ஆசிரியர்களின் விருப்பத்துக்குமாருக ஒருவரையுமே மாற்றக்கூடாது என்று குறிக்கப்பட்டுள்ளது. எனவே கல்விக் கமிஷன் அறிக்கை வெளியாகும் வரை அதில் கூறப்பட்ட விஷயங்கள் அமுலாகும்வரை எந்த ஒரு ஆசிரியரையும் இத்தொகுதியிலிருந்து மாற்றக்கூடாது'' என்னும் தீர்மானம் சங்க நிர்வாக சபையில் ஏகமனதாக நிறைவேறியதுடன் தீர்மானங்களின் பிரதிகளை வட இலங்கைத் தமிழாசிரியர் சங்கத்துக்கும், அதன்மூலம் தாய்ச்சங்கத்துக்கும், கோப்பாய் பாராளுமன்ற உறுப்பினருக்கும் சம்பந்தப்பட்ட ஏனையோருக்கும் அனுப்பி வைப்பதென்றும் தீர்மானிக்கப்பட்டது.

தமிழ்மொழிக்காகவும் சைவசமய வளர்ச்சிக்காகவும் அரும்பாடுபட்டு உழைத்துமறைந்த சிவமணி சேர் கந்தையா வைத்தியநாதன் அவர்களின் ஆத்மா சாந்திக்காக ஆசிரியர்கள் எழுந்துநின்று மௌன பிரார்த்தனை செய்ததுடன் சங்கத்தாரின் அனுதாபத்தை கந்தையாவைத்தியநாதன் குடும்பத்துக்கு அனுப்பி வைப்பதென்றும் தீர்மானிக்கப்பட்டது.

1-7-63-ல் பலாத்காரமாக வெளியிடங்களுக்கு மாற்றப்பட்ட சுவீகரிக்கப்பட்ட பாடசாலை ஆசிரியர்கள் மீண்டும் அவரவர் இடங்களுக்கு மாற்றுமாறு வித்தியா பகுதியை வேண்டுவதென்றும் ஆசிரியர் பிரச்னைகளையிட்டு பாராளுமன்ற உறுப்பினர் வித்தியா பகுதியாரைக் கொண்ட ஒருபொதுக் கூட்டத்தை விரைவில் அத்தியார் இந்துக்கல்லூரியில் நடத்துவதெனவும் தீர்மானிக்கப்பட்டது.

## 'விசேஷ கூட்டத்தை கூட்டுக'

யாழ்ப்பாணம், திங்கள்

செனட்சபையில் சிறுபான்மை சமூகத்தைச் சேர்ந்த ஒருவர் நியமனம் பெறும் வகையில் முயற்சி மேற்கொள்ளுமாறு தமிழ் மக்களை பிரதிநிதித்துவம் செய்யும் தமிழரசுக் கட்சியையும் தமிழ்க்காங்கிரஸ் கட்சியையும் கோரும் பிரேரணையொன்றை விவாதிப்பதற்காக விசேஷ கூட்டம் ஒன்றைக் கூட்டுமாறு யாழ்ப்பாண மாநகரசபையின் 7 அங்கத்வைர்கள் திரு. எஸ். சி. மகாதேவாவைக் கேட்டுள்ளனர்.

திரு. ஏ. டி. துரையப்பாவினுல் இப்பிரேரணை பிரேரிக்கப்படவிருக்கிறது. விசேஷ கூட்டத்தைக் கூட்டுமாறு கோரியுள்ள மற்ற அங்கத்தவர்களின் பெயர்கள் வருமாறு:- திருவாளர்கள் கே. வி. தெய்வேந்திரம் (உதவி மேயர்), டி. எஸ். துரைராஜா, குவாசி எம். எம். சுல்தான், ரி. கந்தையா, எவ். சேவியர், எம். எஸ். பேரின்பநாயகம்.

## நாசவேலையை கண்டுபிடிக்க முயற்சி

பம்பலப்பிட்டி ஞாயிறு

மத்திய வங்கியில் நடைபெறும் நாச வேலைகளைக் கண்டுபிடிக்க முயற்சி மேற்கொள்ளப்படவேண்டுமென கொலன்னு எம். பி. திரு. நந்தா மத்யூவால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள பிரேரணை சம்பந்தமாக அரசாங்க பார்லிமெண்டரிக்குழு அடுத்த செவ்வாய்க்கிழமை கூடும்போது ஆராயவிருக்கிறது.

திரு. மத்யூ தமது பிரேரணையில், அரசாங்கத்துக்கெதிராக மத்தியவங்கியில் நடைபெறும்நாசவேலைகள், வகுப்புத் துவேஷ முயற்சிகள் இவைபற்றிக் கண்டுபிடித்து விசாரணை செய்ய ஒரு தெரிவுக் கமிட்டி நியமிக்கப்பட வேண்டுமெனக் கோரியுள்ளார்.

## கடிகார உதிரிப்பாகங்கள் இறக்குமதிக் 'கோட்டா'

பம்பலப்பிட்டி, ஞாயிறு

கடிகாரங்கள் பழுது பார்க்கும் நிலையங்கள் தமக்குத் தேவையான கடிகார உதிரிப்பாகங்களை இறக்குமதி செய்வதற்கான 'கோட்டாக்கள்' அனுமதிக்கப்படுமென அறியப்படுகிறது.

இதற்கான மனுக்கள் இம் மாதம் 25-ம் திகதிவரை இறக்குமதிக் கட்டுப்பாட்டு இலாகாவுக்கு அனுப்பப்படலாமென அறிவிக்கப்பட்டுள்ளது.

## அனுதாபக் கூட்டம்

கோண்டாவில், ஞாயிறு

''வடமாகாணத்தில் சனசமூக நிலையங்களின் மறுமலர்ச்சிக்காக அயராது உழைத்து, தன் சொந்த வாழ்வையேசமூகத் தொண்டிற்கு அர்ப்பணித்த செம்மல் எம்மை விட்டுப் பிரிந்தது சனசமூக நிலையங்களுக்கே ஒரு பேரிழப்பாகும். வட பகுதியில் ஒரு சனசமூக நிலையங்களின் சமாசம் திறம்பட இயங்குகிறதென்ருல் அதற்கு வழிகாட்டியாக இருந்த பெருமை நண்பர் திரு. சண்முகம் அவர்களையே சாரும். சிறியவன், பெரியவன் என்ற பேதமில்லாது சனசமூக ஒற்றுமைக்காகவும், கிராமப்புறங்களின் பின் தங்கிய பகுதிகளின் முன்னேற்றத்திற்காகவும், தனது ஓய்வு நேரங்களை பயன் படுத்தி பொது மக்களிடையே தனக்கென ஒரு உயரிய ஸ்தானத்தையும், தனது உத்தியோக அலுவலகத்தின் மேல் அதிகாரிகளின் நன்மதிப்பையும் பெற்ற அவர் சனசமூக நிலையங்களுக்குச் செய்த தொண்டு என்றும் அழியாது. மக்கள் நெஞ்சிலே ஊறிக்கிடக்கும்.''

இணுவில்இளந்தாரி கோவில் மண்டபத்தில் வடபகுதி உள்ளூராட்சி விசாரணையதிகாரியாகவும், வவனியா, மன்னர் மாவட்டத்தில் விசாரணை அதிகாரியுமாகவிருந்த திரு. சி. சண்முகத்தின் மறைவு குறித்து நடைபெற்ற அனுதாபக்கூட்டத்தில் யாழ். மாவட்ட சனசமூக நிலையங்களின் துணைச் செயலாளர் திரு. சி. சண்முகலிங்கம் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

கூட்டத்தில் இரண்டு நிமிட நேரம் மௌனம் அனுஷ்டிக்கப்பட்டது. கடந்த சில ஆண்டுகளாக இணுவில் இளந்தாரி கோவில் சனசமூக நிலையத்தின் போஷகராக கடமையாற்றிய திரு. சி. சண்முகத்தின் உருவப்படம் ஒன்று மண்டபத்தில் இடம் பெறவேண்டுமென சபை முடிவுசெய்தது.

திரு. கே. எஸ். ஆனந்தன் பொ. பத்மநாதன் ஆகியோர் பேசினர்.

## நோயாளிகள் கஷ்டம்

வவனியா, ஞாயிறு

வவனியா ஆஸ்பத்திரியில் தண்ணீர் இல்லாத குறையால் நோயாளிகள் பெரும் கஷ்டமடைகின்றனர். மின்சாரக் கோளாறு காரணமாக ஏற்பட்டுள்ள இக்கஷ்டம் தீர்வதற்கான அறிகுறிகள் எதுவும் காணப்படவில்லை.

கிளிநொச்சி, ஞாயிறு

உருத்திரபுரம் காந்தி நிலைய மாணவர் இல்லத்தில் அடுத்தமாதம் 6-ம் திகதி சர்வதேச சிறுவர் தினவிழா கொண்டாடப்படவிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இவ்விழாவுக்கு அகில இலங்கை காந்தி சேவாசங்க உபதலைவர் முதலியார் செ. சின்னத்தம்பி தலைமைதாங்கவிருக்கிருர்.

# "சாதிப்பாகுபாட்டை நீக்க வன்னியசிங்கம் காட்டிய வழி"

மாவிட்டபுரம், ஞாயிறு

''அமரர் வன்னியசிங்கம் பிறந்து வளர்ந்த கிராமத்தில் 10 ஆண்டுகளுக்கு முன்னரே சாதிப்பாகுபாட்டைப் போக்கும் சமபந்தி போசனம் வரவேற்கப்பட்டது. தீண்டாமை ஒழிக்கப்பட வேண்டுமென்பதற்கு முன்னேடியாக அவர் வாழ்ந்து காட்டினுர்'' என்றுமாவிட்டபுரம் கிராமசேவையாளர் திரு. நடராசா கொல்லங்கலட்டியில் நடைபெற்ற அமரர்வன்னியசிங்கம் ஞாபகார்த்த விழாவில் பேசும்போது குறிப்பிட்டார்.

மாவை கொல்லங்கலட்டி வாலிபர் சங்க ஆதரவில் கொல்லங்கலட்டி ஸ்ரீ வீரகத்தி விநாயகர் ஆலயக் கோபுர மண்டபத்தில் நடத்தப்பட்ட வன்னியசிங்கம் ஞாபகார்த்தவிழாவில் திரு. நடராசா தொடர்ந்து பேசியதாவது:

அமரர் வன்னியசிங்கம் 1955ம் ஆண்டு மேற்கொண்ட திருமலை யாத்திரையின்போது சமபந்தி போசனத்தை ஆரம்பித்தார். திருமலையிலிருந்து தமது ஊருக்குத் திரும்பியதும் அவருடைய உறவினர் ஒருவர் வீட்டில் திருமணம் நடைபெற்றது. சாதித்தடிப்பு நிறைந்த இப்பகுதி மக்கள் கூடியிருந்த அந்த நேரத்தில் திரு. வன்னியசிங்கம் நடந்துகொண்ட முறையை இன்னும் நாம் மறக்கமுடியாது.

நான் சாதியில் குறைந்த மக்களுடன் இருந்து உணவு சாப்பிட்டுவிட்டேன். அதனுல் உங்களுடைய கௌரவத்துக்குப் பங்கம் ஏற்படுமானுல் நீங்கள் தனியேயிருந்து சாப்பிடுங்களென்று வன்னியசிங்கம் சொன்னபோது சாதியில் உயர்ந்ததாகக் கூறிக்கொள்ளும் இப்பகுதி மக்கள் எவரும் தனியே சாப்பிடப்போகவில்லை. எல்லோரும் ஒன்ருகவே உணவருந்தினர்.

சமூக ஏற்றத்தாழ்வு வாரம் இப்போது ஆரம்பிக்கப்படுகிறது. 10 ஆண்டுகளுக்கு முன்னரே இப்பகுதி மக்கள் அமரர் வன்னியசிங்கத்தின் கருத்துகளைக் கடைப்பிடிக்க ஆரம்பித்துவிட்டார்கள். தாம் சொன்னவற்றையே வாழ்க்கையில் செயலில்காட்டிய வன்னியசிங்கம் சேர்ந்த அரசியல் இயக்கம் அவருக்குச் சின்னம் நிறுவ முயற்சிப்பது தமது சமயத்தின் மீது கொண்டுள்ள பற்றினை உணர்த்தும்.

வெள்ளிக்கிழமை இரவு இளைப்பாறிய ஆசிரியர் திரு. ஆ. வே. சிற்றம்பலம் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் திருவாளர்கள் இ. துரைச்சாமி, த. செல்வரத்தினம் உட்பட மற்றும் பலரும் பேசினர். விநாயகப் பெருமானுக்கு விசேஷ ஆராதனைகள், கூட்டுவழிபாடு என்பனவும் நடைபெற்றன.

## காயப்படுத்தியவருக்கு ரூ. 100 அபராதம்

ஊர்காவற்றுறை, ஞாயிறு

வேலணை கிழக்கு வேலன் கணபதி அல்லது கணபதிப்பிள்ளை என்பவருக்குப் படுகாயம் விளைவித்ததாக அதே இடத்தில் வசிக்கும் நாகராசா என்பவர்மீது குற்றம் சாட்டித் தொடரப்பட்ட வழக்கில் ஊர்காவற்றுறை மாஜிஸ்திரேட் திரு. ரி.ஜே. இராசரத்தினம் எதிரியைக் குற்றவாளியாகக் கண்டு 100 ரூபா அபராதமும் கோடு கலையும்வரை சிறைத் தண்டனையும் விதித்தார்.

வழக்காளிக்கு அபராதத்தில் ரூபா 90 கொடுக்கும்படியும் நீதிபதி கட்டளையிட்டார்.

## நோயாளர் கஷ்டம்

காங்கேசன்துறை, ஞாயிறு

காங்கேசன்துறை அரசினர் ஆஸ்பத்திரியில் கடமையாற்றிவந்த மாவட்டவைத்திய அதிகாரி நான்குமாதங்களுக்குமுன் மாற்றலாகிச் சென்றிருந்தார். இதுவரை அவர் பதவிக்கு எவரும் நியமிக்கப்படாததால் நோயாளர்கள் மிகவும் கஷ்டப்படுவதாக அறியப்படுகிறது.

## பாடசாலை நாடக போட்டி

சுழிபுரம், ஞாயிறு

அகில இலங்கைக் கலைக்கழகத்தினர் நடாத்தும் நாடக விழா இம் மாதம் தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரியில் நடைபெறவிருக்கிறது. இம்மாதம் நடைபெறவிருக்கும் இவ்விழாவில் அகில இலங்கைரீதியாக பாடசாலைகளுக்கு இடையே நாடக போட்டி நடைபெறும், முதல் மூன்று நாடகங்களுக்கும் பரிசில்கள் வழங்கப்படவிருக்கின்றன.

## பாராட்டுவிழா

சுழிபுரம், ஞாயிறு

சாந்தை சிற்றம்பலம் வித்தியாசாலை தலைமையாசிரியராகக்கடமையாற்றி மாற்றலாகிச் செல்லும் திரு சு. நல்லதம்பிக்கு ஒரு பாராட்டுவிழா பாடசாலை மண்டபத்தில் பிரம்மஸ்ரீ சு. சண்முகரத்தினசர்மா தலைமையில் நடைபெற்றது. பாராட்டுப் பத்திரமும் வாசித்து வழங்கப்பட்டது. திரு. நல்லதம்பியின் சேவையைப் பாராட்டி திருவாளர்கள்: ஆ. பாலகிருஷ்ணன், சு. கதிரவேலு. நா. சிதம்பரப்பிள்ளை, வ. சுப்பிரமணியம், க. வேல்முருகன், எஸ். சின்னத்துரை, அ. மார்க்கண்டு, ச. செல்லத்துரை ஆகியோர் உட்பட மற்றும் பலர் பேசினர்.







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "உரிமை கிடைக்காத வரை சிங்களம் படிப்பிக்கவிடோம்"

## வன்னியசிங்கம் நினைவுதின கூட்டத்தில் தமிழரசுப் பிரமுகர்

மாவிட்டபுரம், ஞாயிறு 'தமிழ் பேசும் மக்கள் வாழும் பிரதேசங்களில் சிங்களத்தைப் போதிக்க கல்வி அமைச்சர் திரு ஐ. எம். ஆர். ஏ. இரியகொல்லை நடவடிக்கை எடுப்பாரானால் அதனை நாம் முற்றாக எதிர்ப்போம். எமது உரிமைகள் வழங்கப்படாத வரையிலும் தேசிய அரசாங்கத்தின் இந்த நடவடிக்கையை நாம் அங்கீகரிக்கமாட்டோம்'' என்று தமிழரசுக் கட்சி ஸ்தாபக உறுப்பினரும் வழக்கறிஞருமான திரு சு. நடராசா மாவிட்டபுரத்தில் நடைபெற்ற வன்னியசிங்கம் நினைவுவிழாவிற் பேசுகையில் குறிப்பிட்டார்.

மாவிட்டபுரம் ஸ்ரீ கந்தசாமி கோவில் மேற்கு வீதியில் காங்கேசன்துறை எம். பி. திரு எஸ். ஜே. வி. செல்வநாயகம் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் திரு நடராசா மேலும் பேசியதாவது:—

இந்த நாட்டில் தேசிய அரசாங்கம் ஒன்று நிறுவப்படுவதற்கு தமிழரசுக்கட்சிதான் முக்கிய காரணமாக அமைந்துள்ளது. நாம் ஐக்கியதேசீயக் கட்சிக்கு ஆதரவளிக்க மறுத்திருந்தால் தேசிய அரசாங்கம் உருவாகியிருக்க முடியாது. நமக்கு அளித்த வாக்குறுதிகளின்படி எமது உரிமைகள் தராது வடக்கு, கிழக்கு மாகாணங்களில் சிங்களத்தைக் கற்பிக்க கல்விஅமைச்சர் முயற்சிகள் மேற்கொண்டுள்ளதாக அறிகிறோம். கல்வி அமைச்சர் தமது முடிவை மாற்றாவிட்டால் அதனால் ஏற்படக்கூடியவிளைவுகளுக்கு அவரே காரணகர்த்தாவாகிவிடுவார்

திரு எஸ். ஜே. வி. செல்வநாயகம் தமது தலைமையுரையில் திரு. வன்னியசிங்கம் தமிழ் மக்களின் உரிமைகளுக்காகத் தம் வாழ்வை அர்ப்பணித்த உத்தமர் எனக் குறிப்பிட்டார்.

மலைநாட்டைச் சேர்ந்த திரு எம். ஜெகநாதன் பேசியதாவது:—

தென்னிந்தியாவிலுள்ள தமிழ் மக்கள், யாழ்ப்பாணத்தவரைப் பண்பாட்டிற் சிறந்தவர்கள் என்று பாராட்டுகிறார்கள். இவ்வாறான யாழ்ப்பாணத்தில் இன்று பண்பு கெட்டுப்போய் விட்டது. மலையக மக்கள் மொழி, பண்பாடு, கலாச்சாரம் என்பனமீதுவைத்துள்ள விசுவாசம் யாழ்ப்பாணத்தவர் எவரிடமுமில்லை. அமரர் வன்னியசிங்கம் எதற்காகப் போராடினாரோ அந்த இலட்சியம் நிறைவேறவேண்டுமானால் நமது பண்பு, சுயமரியாதை, தன்மானம் என்பன பாதுகாக்கப்படவேண்டும்.

கிளிநொச்சி எம். பி. பண்டிதர் கா. பொ. இரத்தினம் பேசியதாவது:

அமரர் வன்னியசிங்கம் எதற்காகப் பாடுபட்டாரோ அதற்கான முயற்சிகளை நாம் மேற்கொள்ள வேண்டும்.

சிங்களம் மட்டும் சட்டம் வருமுன்னரே இந்த நாட்டில் தமிழ்பேசும் இனம் தனது உரிமையுடன் வாழ வேண்டுமென்பதற்காக தமிழரசு வேண்டும் என வாதாடியவர் அவர். தமிழ்மக்கள் சிலரின் எதிர்ப்புடன் சிங்கள விரோதிகளுடன் உரிமைக்காகப் போராடியவர் வன்னியசிங்கம்.

நாம் இன்று தமிழரின் உரிமைகளைப்பெறக் கூடிய நிலைக்கு வந்திருப்பதற்கு அமரர்வன்னியசிங்கம் ஆற்றிய தொண்டுகளே காரணமாகும். காந்திஜி இந்தியாவில் சுதந்திரஉணர்வை தட்டியெழுப்பியது போல இலங்கையிலும் உரிமைக்காக உயிரையும் கொடுப்போம் என்ற புதிய உணர்வை ஏற்படுத்தியவர் அவர்.

தமிழ்மக்கள் தமது அரசாங்கத்தொடர்பினை ஆங்கிலத்தில் வைத்திருப்பதனால்தான் இந்த அவலநிலை ஏற்பட்டுள்ளது. சிங்களமக்களிடம் காணப்படும் இனப்பற்று தமிழ்மக்களிடம் இல்லாதிருப்பது கவலை தருவதாகும். தமிழ் மொழிக்கு உரிய அந்தஸ்து இந்த நாட்டில் கிடைக்க வேண்டுமென்றால் தமிழ் மக்கள் தாய்மொழியிலேயே தொடர்புகொள்ள வேண்டும்.

பலதுறைகளிலும் தமிழுக்குத்தொண்டுசெய்த அமரர் வன்னியசிங்கம் காட்டிய வழிகளை நாம் போற்றி அதனைப் பின்பற்றவேண்டும். இந்தநாட்டில் சமஷ்டி ... முடியாது. என்ன கஷ்டம் ... வரினும் நமது இந்த உயிர்க் ... கையைக் கைவிடக் ... து. மற்றும் பலரும் ... பசினர்.

## நொத்தாரிஸ்மார் சட்டம் 107-ம், 7 ம் பிரிவு அறிவித்தல்

அல்வாய் மேற்கு சின்னையா கிருஷ்ணபிள்ளை ஆகிய நான் யாழ்ப்பாண மாவட்டத்தில் தமிழ்நொத்தாரிசுவாகக் கடமைபார்க்க என்னை நியமிக்கும்படி இத்திகதி தொடக்கம் ஒரு மாதத்துக்குப்பின், கொழும்புப் பதிவு காரியகர்த்தர் அவர்களுக்கு விண்ணப்பஞ் செய்யவிருக்கிறேன் என்பதை இதனால் அறியத்தருகிறேன்.

சி. கிருஷ்ணபிள்ளை,
அல்வாய் மேற்கு,
அல்வாய்.

18-9-65 865


## விளம்பரம்

தேவை
வேப்பங்கொட்டை
சுந்தரம் பிறதர்ஸ்
73, மின்சாரநிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

### கைத்தறி நெசவாளர்களுக்கு ஓர் அறிவித்தல்

நீங்கள் தயார் செய்யும் எல்லாவித கைத்தறி தினுசுகளையும் நிதானமான விலைகளில் விற்பனைசெய்ய சந்தர்ப்பம் தருகிறோம். உடன் எம்முடன் தொடர்பு கொள்ளவும்.

எஸ். ஆர். செல்லத்துரை,
216, கே.கே.எஸ். ரோட்,
யாழ்ப்பாணம்,
போன்: 296,

### தேவை

ஆனையிறவு பலநோக்கு கூட்டுறவுச்சங்கத்திற்கு ஒரு பயிற்றப்பட்ட மனேஜர் தேவை. பிணைப்பணம் ரொக்கம் ரூபா 1000. ஆதனப் பிணை ரூபா 2000. வேதனம் சகலதும் உட்பட ரூபா 80. விண்ணப்பம் 25-9-65ற்குள் சங்கத் தலைவருக்கு அனுப்பப்படல் வேண்டும். 866

REGAL--JAFFNA
NOW SHOWING!
KARL BOEHIM
IN
RIFIFI IN TOKYO
(Suspense - Action Film)

இப்பொழுது திரையிடப்படுகிறது!

கிங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை) நவா (கும்பனித்தெரு)
விஜயா (மட்டக்களப்பு) ஸ்ரீ கிருஷ்ணா (திருமலை) விஜிதா (ஹட்டன்)
மொடேர்ன் (பண்டாரவளை) தீவொளி (நுவரெலியா) லக்ஷ்மி (இரத்தினபுரி)
வெலிங்டன் (யாழ்ப்பாணம்)

தினசரி 2 காட்சிகள்; சனி, ஞாயிறு 4காட்சிகள்

சிவாஜி கணேசன், சாவித்திரி
எஸ். எஸ். ராஜேந்திரன், கே. ஆர். விஜயா
நடிக்கும்



கைகொடுத்த தெய்வம்



## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

புதிய மின்சார வெல்டிங் ரான்ஸ்போமர் (Welding Transformer) விற்பனைக்குண்டு. நேரில் விண்ணப்பிக்கவும். விளம்பரதாரர், வை. எம். சீ. ஏ., சுண்டிக்குளி. 1046

ஒஸ்டின் கேம்பிறிஜ் டிலிவறிவான் 33ஸ்ரீ 1780 உன்னத நிலையில் கே. ஆர். லிங்கம் மில்ஸ், 28, நீராவியடி, யாழ்ப்பாணம். 1037

ஏம்மிடம் பலரக முந்திரிகைச் செடிகள் விற்பனைக்குண்டு. செமிலோன் சிகப்பு, இசைப்பிலா வெள்ளை, அவுஸ்திரேலியன் விருட்டி ஆகிய ரகங்கள் உண்டு. சி. சபாரெத்தினம், 20, சர்பத்கடை, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 1048

### தேவை

வட்டுக்கோட்டை பலநோக்குக்கூட்டுறவுச் சங்கத்தில் கைத்தறிநெசவுசெய்வதற்குத் தராதரமும், அனுபவமும் வாய்ந்த மூவர் தேவைப்படுகின்றனர். வேதனம், தராதரத்திற்கேற்ப யார்க்கணக்கில் வழங்கப்படும். 1-10-65க்கு முன் காரியதரிசி, வட்டுக்கோட்டை பலநோக்கக் கூட்டுறவுச்சங்கம், வட்டுக்கோட்டை என்ற விலாசத்திற்கு விண்ணப்பிக்கவும். 1047

### கல்வி

ஆசிரியர்களுக்காய பல்கலைக்கழகப் பரீட்சைகளுக்குரிய விசேட வகுப்புகள் வடபிரதேச ஆசிரிய சங்கத்தால் கொட்டடி நமசிவாய வித்தியாலயத்தில் நடத்தப்படும் வடபிரதேசப் பல்கலைக் கழகத்தில் B.A.; B. Sc (General & Special) G. A. Q.; G. S. Q.; G. C. E. (A/L &O/L Arts & Science) மாலை-விடுமுறை-வார இறுதி வகுப்புகள், இப்பொழுது கழகத்திற் கற்கும் 109 ஆசிரிய மாணவர்கள் போற்றும் சிறந்த விரிவுரையாளர்களால் ஒழுங்காக நடத்தப்படுகின்றன. B.com; L.L.B.; M.A Q வகுப்புகள் 1-10-65ல் ஆரம்பமாகும். முத்திரையொட்டிய உறையுடன் விண்ணப்பிக்குக அல்லது நேரிற் சந்திக்கவும். கா. க. காசிப்பிள்ளை, பொதுக்காரியதரிசி, N. R. T. A., இந்துக்கல்லூரி, யாழ்ப்பாணம். 1051





## கொழும்பு
### திங்கள் 20 - 9 - 65


(செய்திகள்: காலை 7-15, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00).

344 மீற்றர் & 61 மீற்றர்
காலை 6-45 நாதாஞ்சலி, 6-50 சைவநற்சிந்தனை, 6-55 கிறிஸ்தவநற்சிந்தனை, 7-00 துதிப்பாடல்கள், 7-30 தேர்ந்தஇசை, 7-45 திரைஇசை, 8-15 இஸ்லாமியகீதங்கள்.

344 மீற்றர் & 49 மீற்றர்
பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்பஇசை.

344 மீற்றர் & 61 மீற்றர்
மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 ஒலிப்பதிவுகள், 5-45 படப்பாட்டுக்கள்.

இரவு 6-15 கிராமசஞ்சிகை, 6-45 புல்லாங்குழல் - ஸ். ஸ்ரீதாஸ், 7-15 பாட்டு - எஸ். கோவிந்தராஜன், 8-00 முஸ்லிம்நிகழ்ச்சி, 9-15 நேயர்விருப்பம், 9-30 தமிழ்மூலம் சிங்களம், 10-15 எங்கள் விருப்பம்.




### புறப்படும் நேரங்கள்

யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்புக்கு ரயில் புறப்படும் நேரங்கள் வருமாறு:- காலை 6-02 ''யாழ்தேவி'' 7-35 சாதாரண ரயில், மத்தியானம்— 2-25 ''யாழ்தேவி'', இரவு— 7-00 மெயில், ஞாயிற்றுக் கிழமைகளில் மட்டும் இரவு— 8-50க்குகொழும்புக்குஒருவிசேஷ புகையிரதம் செல்லும்.

யாழ்ப்பாணத்திலிருந்து பளைக்கு ரயில் புறப்படும் நேரங்கள் வருமாறு:- மத்தியானம் 1-20, மாலை 4-00 ரயில்கார், மாலை4-48, 5-50.

கிளிநொச்சிக்குகாலை 8-45க்கும், அநுராதபுரத்துக்கு இரவு 8-50க்கும் யாழ்ப்பாணத்திலிருந்து ரயில்கள் புறப்படும்.

### வந்துசேரும் நேரங்கள்

கொழும்பிலிருந்து புறப்பட்டு யாழ்ப்பாணம் வந்து சேரும் நேரங்கள்:- காலை 5-00 மெயில், மத்தியானம்—1-02யாழ்தேவி, மாலை—5-54 சாதாரண ரயில், இரவு—9-19 யாழ்தேவி.

பளையிலிருந்து புறப்படும் ரயில்கள் யாழ்ப்பாணம் வந்து சேரும் நேரங்கள்:- காலை—6-50, 8-03, 8-41 (ரயில் கார்) இரவு—8-00. அநுராதபுரத்திலிருந்துபுறப்படும்ரயில் காலை—10-30க்கும், கிளிநொச்சியிலிருந்து புறப்படும் ரயில் மாலை 4-35க்கும் யாழ்ப்பாணத்தைவந்தடையும்.

## தமிழ்க்கலைஞர்கள் புறக்கணிப்புக்கு ஆட்சேபம்

சுழிபுரம், ஞாயிறு சாம்ராஜ்யக் கலை விழாவில் தமிழ்க் கலைஞர்களின் நிகழ்ச்சிகள் புறக்கணிக்கப்பட்டதற்கு மிகவும் வருத்தம் தெரிவித்து வட இலங்கை கிராமியக் கலைக்கழகத்தினர் கலாச்சார இலகா அதிபருக்கு கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளார்.

தற்பொழுது நடைபெறும் சாம்ராஜ்யக் கலைவிழாவில் கலந்துகொள்ளும் பொருட்டு இங்கிருந்து சென்ற கலைஞர் கோஷ்டியில் தமிழ் கலைஞர்களில்ஒருவரும் இடம்பெறுமையைச்சுட்டிக் காட்டியும் தமிழ் கலைஞர்கள் புறக்கணிக்கப்படுவதால் இந்நாட்டின் தேசிய ஒருமைப்பாட்டுக்குப் பங்கம் விளைவிப்பதாகவும் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளனர், தமிழ்க்கலைஞர்களின் கலையை உலக நாடுகள் பார்க்கும் வாய்ப்பை உண்டுபண்ண கலாச்ரப் பகுதியினர் மேலும் நடவடிக்கை எடுக்கவேண்டும். அப்படிச் செய்வதன் மூலமே தேசிய ஐக்கியம் மேலும் வளர்ச்சியடையும் எனவும்அக்கடிதத்தில் கூறப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சிக்கிம்-திபெத் எல்லையோரத்தில் சீனத்துருப்புகள் நடமாட்டம்

லண்டன், சனி

சிக்கிம் - திபெத் எல்லையின் இரு நிலைகளில் சீனத்துருப்புகள் எல்லையோரமாக நடமாட்டம் செய்ய ஆரம்பித்துள்ளதாக இந்திய பாதுகாப்பு இலாகா தெரிவித்துள்ளது.

சிக்கிம் பகுதியில் திபெத் நிலையிலும், லடாக் டெம்ஸ்கொக் பகுதியில் 600 மைல் தொலைவில் காஷ்மீருக்கு வடகிழக்கே உள்ள நிலையிலும் சீனத்துருப்புக்கள் எல்லையோரமாக நடவடிக்கை மேற்கொண்டுள்ளதாக இந்திய பாதுகாப்பு இலாகாவின் குறிப்பு ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த இரு நிலைகளிலும் எந்த நேரத்திலும் சீன தாக்கலாம் என இந்திய பாதுகாப்பு இலாகா அதிகாரிகள் நம்புவதாக புதுடில்லியில் உள்ள தமது நிருபர்தெரிவித்ததாகபி. பி. ஸி.அறிவித்துள்ளது.

பாதுகாப்புசபைஇன்றிரவுஇலங்கைநேரப்படி இரவு 8 மணிக்கு கூடி இந்திய - பாகிஸ்தான் சண்டை சம்பந்தமான யு தாண்டின் அறிக்கை பற்றி விவாதிக்கிறது. இச்செய்தி அச்சுக்குப்போகும் பொழுது இந்தியாவையும் பாகிஸ்தானையும் போரை நிறுத்துமாறு ஐ. நா. உத்தரவிடுமாறு திரு. யு தாண்ட் தெரிவித்த சிபார்சு பற்றி பாதுகாப்பு சபையில் ஆராயப்பட்டது. பாதுகாப்பு சபையின் உத்தரவுக்கு பணிய மறுத்தால் அங்கநாடுகளின் இருநாடுகளுக்கு மானபொருளாதாரம் மற்றும் சகல உதவிகளும் நிறுத்தப்படும் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்திதியாவுக்கு சீன விடுத்த எச்சரிக்கை பற்றியும், திபெத்-சிக்கிம் எல்லையை அண்மித்து சீனத்துருப்புகள் நடமாட்டம் செய்வது குறித்தும் பாதுகாப்புசபை விவாதிக்கும் என ஐ. நா. வட்டாரங்களிலிருந்து அறியப்படுகிறது.

இந்திய - பாகிஸ்தான் சண்டை சியால்கோட்முனையில் நடைபெற்றும் லாகூர் எல்லையில் சிறிது ஓய்ந்தும் விட்டதாக அறிவிக்கப்படுகிறது. எனினும் வேறு இடங்களில் குண்டு வீச்சுகள், துருப்புகள் மோதல் ஆகியன இடம்பெற்றுள்ளன.

## 'கடமைசெய்பவரே போற்றப்படுபவராவர்': இரங்கற் கூட்டத்தில் மந்திரி பேச்சு

சுழிபுரம், ஞாயிறு

''அரசாங்க ஊழியர்களாக கடமையாற்றும் உத்தியோகஸ்த்தர்கள் தமது வேலையை முன்பு செய்தது போல் இல்லாமல், மக்களின் சேவையாளராகக் கடமையாற்றும் காலம் இது. மக்களின் தேவைக்கு ஏற்றது போல் தமது கடமையை செய்பவனே என்றும் மக்களால் போற்றப்படும் ஊழியன் ஆவான். எந்த ஊழியனும் தனது சேவையை கடமை, கண்ணியம், கட்டுப்பாட்டுக்குள் செய்வானகில் உண்மையில் என்றும் போற்றப்படுவான்'' என உள்ளூராட்சி அமைச்சர் திரு. எம். திருச்செல்வம் காலஞ்சென்ற பெரியார் திரு. வி. சி சண்முகத்தின் இரங்கற் கூட்டத்தில் பேசுகையில் குறிப்பிட்டார்.

யாழ். மாவட்ட சனசமூக நிலையங்களின் சமாஜத்தினரால் மானிப்பா ''சீற்றி'' கட்டிடத்தில் நடைபெற்ற கூட்டத்துக்கு சமாஜ உபதலைவர். திரு. வி. நல்லதம்பி தலைமை வகித்தார்.

திருக்கோணமலை உள்ளூராட்சி உதவி அதிபர் எஸ். சிவராசா பேசுகையில் எம்முடன் சேவை செய்த ஓர் உண்மையான சேவையாளன் திடீர் என மரணமானது பெரும் துயராகும், அவர் ஓர் உண்மையான சைவ சமய சீலராக வாழ்ந்தார் என்பதை நான் அவருடன் பிரயாணம் செய்யும் போது நன்கு அறிந்தேன் தேவார திருவாசகங்களை நன்கு இனிமையாகப் பாடுவார்.

வடபகுதி உள்ளூராட்சி உதவி அதிபர் எஸ். சி. மாணிக்கவாசகர் பேசுகையில், நான் எனது வாழ்நாளில் காலம் சென்ற சண்முகத்தைப் போன்ற உத்தியோகஸ்தர் ஒருவரை காணவில்லை. சுகயீனம் என்று லீவு எடுத்து போகச் சொன்னாலும் டாக்டரின் கட்டுப்பாட்டையும் மீறி அடுத்த தினமே லீவை இரத்து செய்து கடமையாற்றும் ஓர் கண்ணியமான உத்தியோகஸ்த்தவராவர். கிராம சபை அங்கத்தவர்களுக்குள் ஏற்படும் பிணக்கை சுலபமாக தீர்த்து வைப்பவர் என்பதை பல விடயங்களில் கண்டுள்ளேன்.

வடபகுதி ஐக்கிய நாடுகள் சங்க செயலாளர் எஸ். சிவனேசன் பேசுகையில், பல பொது இயக்கங்களின் முக்கிய ஆலோசகராகவும், சேவையாளராகவும் பணியாற்றியதை நான் நன்கு அறிவேன். திரு. சண்முகத்தின் இடத்தை நிரப்ப நான் அவருடைய நோக்கை மேன்மையடையச் செய்வதே எனது சேவையாகும், என்றார்.

திருவாளர்கள் த. துரைசிங்கம், சி. இராஜேந்திரன், என். சண்முகநாதன் பண்டிதர் ஆசிநாதன் உட்பட மற்றும் பலர் பேசினர்.

### கட்டுநாயகா

## விமானநிலையத்தில் மேலும் வசதிகள்

பம்பலப்பிட்டி, சனி

இந்தியா - பாகிஸ்தான் யுத்தம் காரணமாக வெளிநாட்டு விமானங்கள் இந்தியா, பாகிஸ்தான் மூலம் செல்லாமல் இலங்கை கட்டுநாயக்கா மூலம் செல்வதால் அதிக பிரயாணிகள் இங்கு தங்கிச் செல்லவேண்டியிருப்பதால் இவர்களுக்கு போதிய வசதிகள் அளிக்க போக்குவரத்து மந்திரி திரு. ஈ. எல். பி. குருளே நடவடிக்கைமேற்கொண்டுள்ளார்

## இலக்கிய விழா

சுழிபுரம், ஞாயிறு

மானிப்பாய் பட்டினசபையினர் இலக்கிய விழாவை சனி, ஞாயிறு ஆகிய தினங்களில் கொண்டாடினர். மானிப்பாய் இந்துக்கல்லூரி மண்டபத்தில் நடைபெற்ற முதல் நாள் நிகழ்ச்சிகளில் பல அறிஞர்கள் சொற்பொழிவாற்றினர். நிகழ்ச்சிகள் கலாநிதி ஆனந்த குமாரசாமி அரங்கில் நடைபெற்றது.

## சுதந்திரத்தை . . .

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ரப் பெருமையையும் காப்பாற்றிவருவதில் பெரும் சேவைசெய்துள்ளது எனக் குறிப்பிட்டு கல்லூரி தொடர்ந்து தன்னலமற்ற சேவையை எல்லோரது ஒத்துழைப்புடனும் செய்துவர வேண்டுமெனத் தாம் வேண்டுகோள் விடுக்கவிரும்புவதாகத் தெரிவித்தார்.

கல்லூரி அதிபர்திரு. என். சபாரத்தினம் பேசுகையில் கூறியதாவது:-

சேர் அல்பேர்ட் பீரிஸ் மூன்று கலாச்சாரங்களும் ஒன்று சேர்ந்து ஒரு பிரதேசத்திலிருந்து வருபவர்போல் தெரிகிறது. அவரது பரந்த மனப்பான்மையும் சிறந்த நோக்கமும் இவ்விதம் எண்ணத் தூட்டுகிறது.

ஒரு நல்ல சூழ்நிலையில் இருக்கிறோம் என்ற மன ஆறுதல் இப்போது நம் இடையேநிலவியுள்ளது முன்னர்ஒருதடவை ராணுவத்தினர்தங்குவதற்குவற்புறுத்தலின்பேரில் இந்தப் பாடசாலை உபயோகப்படுத்தப்பட்டது. ஆனல் இப்போது யாழ்ப்பாணத்துக்கு நல்லெண்ணத்துடன் வந்துள்ள சிங்கள மாணவர்கள் தங்குவதற்கு நாம் மனமுவந்து இடம் கொடுத்துள்ளோம். இந்த நிலை இரு சமூகத்தவருக்கும் நன்மை ஏற்படுத்தும்.

பலதரப்பட்டவர்களின் நல்லெண்ணத்தினலும் ஓயாத உழைப்பினலும் தன்னலமற்ற சேவையாலுமே எமது கல்லூரி இந்த நிலைக்கு உயர்ந்துள்ளது. ஒவ்வொரு வருடமும் நாட்டின் தேவைக்கும் சேவைக்கும் நாம் டாக்டர்களையும் என்ஜினியர்களையும் இங்கிருந்து உடுவாக்குகின்றோம் என்பதைப் பெருமையுடன் கூற விரும்புகிறேன்.

நாட்டின் தலைசிறந்த கல்லூரிகளில் ஒன்றுகத் திகழும் நமது கல்லூரி தனது பணியைத் தொடர்ந்து செய்யுமென்பதில் எனக்கு நம்பிக்கை இருக்கிறது. இதற்கு எல்லோரது ஒத்துழைப்பும் கிடைக்கும் என்பதில் எனக்கு நம்பிக்கையுண்டு''.

இவ்வைபவத்துக்குத் தலைமைவகித்த டாக்டர் வி. ரி. பசுபதி தமது உரையில், கல்லூரியை ஸ்தாபித்தவர்களுக்கு, எல்லோரும்மிக்ககடமைப்பட்டவர்கள் என்றும் இலங்கையின் கல்வி வளர்ச்சிக்கு தன்னலமற்ற தியாகிகளும் மிஷனரிமார்களுமே பொறுப்பானவர்கள் என்றும்குறிப்பிட்டார்.

திரு. சி. சுப்பிரமணியம், திரு. எஸ். ஆர். கனகநாயகம், டாக்டர். பி. சிவசோதி, திரு. எஸ். வி. பாலசிங்கம் ஆகியோரும் உரைநிகழ்த்தினர்.

## சீன பூச்சாண்டி. . . .

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

மிருக்கிறது. ஐ. நா.வின் யோசனைக்கு இணங்காமல், பாகிஸ்தான் பிடிவாதம் காட்டி யுத்தத்தை நீடிப்பதாயின் மூன்ருவது உலக யுத்தம் ஏற்படவும் பாகிஸ்தான் உள்ளிட்டு ஆசியாவே அழியவும் அதுவே பொறுப்பாக இருக்கும்.

---

பம்பலப்பிட்டி, திங்கள்

தல்கொடப்பிட்டியா லஞ்சச் சபையினுல் குற்றவாளிகளெனக் காணப்பட்டவர்களின் பொதுவுரிமைகளை நீக்குவதற்கான மசோதா விரைவில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப் படவிருக்கிறது.

இதற்கான மசோதாவை இராஜாங்கமந்திரி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன பிரதிநிதிகள் சபையில் சமர்ப்பிப்பார்.

## விற்பனைக்கு

இரு பெட்போர்ட் வான்கள் (1 ஸ்ரீ 791, 33 ஸ்ரீ 1865 இலக்கமுடையவை) ஒரு அட்லஸ் பிரயாணிகள் வான் (4 ஸ்ரீ 1088 இலக்கமுடையது) விற்பனைக்குண்டு. நேரில் பார்வையிடலாம். பிறவுண் & கம்பனி லிமிட்டெட், பரந்தன். 1049

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலை வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1965-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 20-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

## 'பட்டதாரிகள் ஆசிரியத் தொழிலை மட்டும் நாடக்கூடாது'

— மந்திரி திருச்செல்வம்

யாழ்ப்பாணம், திங்கள்

வேலையற்ற இந்திய சர்வகலாசாலைப் பிரிவைச் சேர்ந்த விஞ்ஞான பட்டதாரிகள் நேற்றுக்காலை ஸ்தலஸ்தாபன மந்திரி திரு. எம். திருச்செல்வத்தை காங்கேசன்துறை வாடி வீட்டில் சந்தித்து தங்கள் குறைபாடுகளை மந்திரியிடம் தெரிவித்தனர்.

பலமணி நேரம் நடைபெற்ற இப்பேச்சு வார்த்தைகளின் போது மந்திரி வேலையற்றிருக்கும் பட்டதாரிகள் பிரச்னைக்கு புதிய முறையில் வேலைவாய்பு தேடக்கூடிய வழிவகைகளை ஏற்படுத்தலாம் என்றும், ஆபிரிக்கா, நேப்பால் முதலிய தேசங்களில் வேலைவாய்புக்கள் ஏற்படக் கூடிய சந்தர்ப்பம் இருப்பதாகவும் கருத்துத் தெரிவித்துள்ளதாகவும் தெரிய வருகிறது.

வேலையற்றிருக்கும் பட்டதாரிகள் ஆசிரியத்தொழிலை மட்டும் நம்பியிருக்கக் கூடாதென்றும் வேலை வாய்ப்புக்கள் பிறநாடுகளில் கிடைக்குமாயின் அங்கு செல்லவும் ஆயத்தமாக இருக்க வேண்டும்.' என்று மந்திரி பேட்டி காணச் சென்ற குழுவினரிடம் கருத்துத்தெரிவித்துள்ளார் எனக் கூறப்படுகிறது.

வீட்டுப்பணி பட்டதாரிகள் நிலைமைபற்றியும் மந்திரியுடன் ஆராயப்பட்டு விரைவில் சுகாதாரப் பகுதியில் இவர்களைச் சேர்த்துக் கொள்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்றும் பேச்சுவார்த்தையின் போது அபிப்பிராயம்தெரிவிக்கப்பட்டுள்ளது.

## திரு. மார்ட்டினுக்கு....

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

எச். மசூர், என். எம். அப்புகாமி (மறுதெரிவு), சி. எக்ஸ். மார்ட்டின் அல்லது எஸ். நடராசா ஆகியோர் அரசாங்கத்தினல் செனட்டர்களாக நியமிக்கப்படலாம் எனத் தெரிய வருகிறது.

எதிர்க்கட்சியினர் திருவாளர்கள் ஜே. பி.ஒபயசேகராவையும், ஏ.ஆர்.பெரராவையும் மறுமுறையும் செனட்டர்களாக நியமிக்கவிருக்கிறுர்கள்.

இதைவிட ஐந்து காலிஸ்தானங்கள் தேசாதிபதியினல் பிரதமரின் சிபார்சின் பேரில் நிரப்பப்படும்.

## சம்பளஉயர்வு கோரிக்கை

பம்பலப்பிட்டி, வெள்ளி

லங்காசமசமாஜக்கட்சியும் இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியும் தேசியஅரசாங்கத்தின் திட்டமான தனியார்துறையில் வேலை செய்யும் ஊழியர்களுக்கு லாபங்களை பகிர்ந்து கொடுக்கப்பட வேண்டுமென்ற கருத்தை எதிர்த்து பிரசாரம் செய்து வருவதாகத் தெரியவருகிறது.

# சிறுகதை, கவிதைப் போட்டி

## சமூக ஏற்றத்தாழ்வு ஒழிப்பு வாரத்தையொட்டி ஈழநாடு அளிக்கும் வாய்ப்பு

19-9-65-முதல் 25-9-65 வரை நடைபெறும் சமூக ஏற்றத்தாழ்வு ஒழிப்பு வாரத்தின் ஓர் அங்கமாக சிறுகதை, கவிதைப் போட்டியை நடத்துவதற்கு சமூக ஏற்றத்தாழ்வு ஒழிப்பு வாரக்குழு ஒழுங்குசெய்துள்ளது.

### நிபந்தனைகள்

(1) இப்போட்டிக்கு அனுப்பப்படும் சிறுகதைகளும், கவிதைகளும் சமூகத்தில் வித்தியாசத்தால் ஏற்படும் ஏற்றத்தாழ்வுகளை ஒழிக்கும் கருத்துடையனவாக இருக்க வேண்டும்.

(2) போட்டிக்குரிய கதைகளும், கவிதைகளும் 24-9-65-ந் திகதிக்கு முன்னர் சிறுகதை, கவிதைப் போட்டி, ஆசிரியர் ஈழநாடு, த. பெ. எண் 49, யாழ்ப்பாணம் என்ற விலாசத்துக்கு அனுப்பப்பட வேண்டும்.

(3) இப்போட்டியின் முடிவு சம்பந்தமாக ஈழநாடு ஆசிரியரின் தீர்ப்பே இறுதியானது.

(4) சிறுகதையும், கவிதையும் தனிப்பட்ட எவரையும் தாக்குவதாக இருக்கக்கூடாது.

### பரிசுகள்

பரிசுக்குரிய சிறுகதைக்கு 50 ரூபாய் பெறுமதியான தமிழ் நூல்களும், பரிசுக்குரிய கவிதைக்கு 50 ரூபாய் பெறுமதியான தமிழ் நூல்களும் வழங்கப்படும்

போட்டியில் தெரிவுசெய்யப்படும் முதல் மூன்று சிறுகதைகளும், கவிதைகளும் ஈழநாடு வாரப்பதிப்பில் பிரசுரிக்கப்படும்.

இப்போட்டியில் கலந்துகொள்ள விரும்புவோர் பின்வரும் கூப்பனை நிரப்பி தாம் அனுப்பும் சிறுகதை, கவிதையுடன் அனுப்பவேண்டும்.

சமூக ஏற்றத்தாழ்வு ஒழிப்பு

சிறுகதை, கவிதைப் போட்டி

பெயர்: ____________________

விலாசம்; ____________________

கதை / கவிதை (தலைப்பு)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org